உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 33 | ஆனந்த - ஆவணி - 10—9—74 | இதழ் 10

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## இந்தியக் குடியரசின் இருபெருந் தலைவர்கள்

### நல்வரவும் நல்வாழ்த்தும் :

'ஜனநாயகம்' என்று வழங்கப்படும் 'மக்கள் ஆட்சி உலகப் பெருநாடுகளில் அரசியல் துறையில் பாராட்டத்தக்க சீரிய அமைப்பாக விளங்குகின்றது. உலக நாடுகள் ஒவ்வொன்றிலும் மக்கள் ஆட்சி முறை நடைபெற்று வருகின்றது. 'மக்களுக்காக—மக்களால் — மக்களே அமைத்திடும் அரசு' என்று வருணிக்கப்படும் இந்த அரசியல் அமைப்பு முறை அமைந்த நம் பாரதப் பழம் பெருநாடு அண்மையில் குடியரசுத் தலைவர், துணைத் தலைவர்க்கான தேர்தல்களை நிகழ்த்தியது. பெருவாரியான வாக்குக்களைப் பெற்று இந்தியக் குடியரசுத் தலைவராக **திரு. பக்ருதீன் அகமது** அவர்களும், துணைத் தலைவராக **திரு. ஜட்டி** அவர்களும் வந்துள்ளார்கள். இவ்விரு பெருந்தலைவர்களுக்கும், "ஞானசம்பந்தம்" தன் நல்வரவையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி எய்துகின்றது.

## நம்பிக்கை ஒளி :

இவ்விரு பெருந்தலைவர்களின் ஆட்சிக் காலத்தில், நம் தாய்த் திருநாட்டில் நன்மைகள் பெருகவும், தீமைகள் குறையவும், வாய்ப்புக்கள் பெருகட்டும் என்று வாழ்த்துகிறது. நம் திருநாட்டின் தொன்மையான 'பாரம்பரியங்களை' க் காப்பதிலும், உலக அரங்கில் நமக்குள்ள தார்மிகப் பெருமைகளைப் பேணி வளர்ப்ப திலும், இவ்விரு பெருந்தலைவர்கள் கண்ணுங்கருத்துமாக இருப் பார்கள் என்ற நம்பிக்கை ஒளி மக்கள் மனத்தே பரவி மலர்ந்துள்ளது.

## குடியரசுத் தலைவர் குடி நலம் :

குடியரசுத் தலைவர் **திரு. பக்ருதீன் அகமது** அவர்கள் உயர்குடியிற் பிறந்தவர்; அவர்களது தந்தையார் டாக்டர் அகமது அவர்கள் அசாம் மாநிலத்தைச் சேர்ந்தவர். உத்தரப் பிரதேசத் திலும், புது தில்லியிலும், பஞ்சாப் பல்கலைக் கழகத்திலும் தம் உயர்பள்ளிக் கல்வியைப் பெற்ற திரு. பக்ருதீன் அவர்கள், இலண்டன் சென்று வழக்கறிஞர்க்கான கல்வி முடித்துப் பாரத நாடு திரும்பியவர். *1931* ஆம் ஆண்டு அரசியல் வாழ்க்கை தொடங்கியவர். *1935* ஆம் ஆண்டு அசாம் சட்டமன்ற உறுப் பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். சுதந்திரப் போராட்டத்திற் கலந்துகொண்டு சிறை புகுந்து தியாக முத்திரை பெற்ற செம்மலார். மாநில அமைச்சராகப் பல ஆண்டுகள் இருந்து பயிற்சி பெற்ற பிறகு *1966* ஆம் ஆண்டில் மத்திய அரசு அமைச்ச ராகப் பணியாற்றத் தொடங்கிய பண்பாளர்.

## ஆழ்ந்த மதப்பற்று :

கல்வி, வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்தபோது நாடு, திரு. பக்ருதீன் அவர்களது செயல்திறனை வியந்து கண்டது. ஆழ்ந்த மத நம்பிக்கை கொண்டவராக — விரிந்த உளப் பாங்குடைய வித்தகராக—பொது வாழ்வில் தூய மனம் கொண்ட தூயோராக இந்தியப் பெருநாடு திரு. பக்ருதீன் அவர்களைக் கண்டு பெருமிதம் கொண்டது.

விளையாட்டு வீரராக—இசைத் துறையில் சிறந்த ரசிகராக— புத்தகங்கள் படிக்கும் சிந்தனையாளராக இதற்கெல்லாம் மேலாக தெய்வ பக்தியும் மிக்கவராக—இவரது தனிவாழ்வு சிறந்திருப்பது பலரும் அறிந்த ஒன்றாகும்.

### இறையருட் சம்மதம் :

தாம் மேற்கொண்டுள்ள முகமதிய மதக் கோட்பாடுகளில் ஆழ்ந்த பற்றுக்கொண்ட திரு. பக்ருதீன் அவர்கள் ஏனைய மதங்கள் மாட்டுச் சிறிதும் காழ்ப்புணர்ச்சி இல்லாமல், ஒப்ப மதித்துப் பாராட்டும் பெரும்பண்பு வாய்ந்தவராக இருத்தல் எல்லோருக்கும் மகிழ்ச்சித் தருவதாகும். **'எம்மதமும் சம்மதமே'** என்ற உயர் நோக்குடையவர் என்பது, பல்வேறு மதங்களைக் கொண்ட பாரதப் பெருநாட்டிற்குப் பெருமகிழ்வு தரத்தக்க ஒன்றாகும். மதச்சார்பற்ற அரசாக உள்ளது நம் குடியரசு; மதப் பற்று அற்றது அன்று. இதன் அமைப்பிற்கு மதப்பற்று மிக்க மாண்புடைத் தலைவராக தெய்வபக்தி மிக்க தலைவராக, **திரு. பக்ருதீன் அகமது** அவர்கள் வந்துள்ளமையும் தாம், பதவியேற்ற அன்று அனைத்து மதத்தவர்களையும் ஒன்றுகூட்டிப் பிரார்த்தனை நிகழ்த்தியமையும் எடுத்துக்காட்டாக இலங்குகின்றன.

### துணைத்தலைவர் திறன் :

இவ்வாறே துணைத்தலைவராக வந்துள்ள **திரு. பாசப்ப தாசப்ப ஜட்டி அவர்கள்** ஆழ்ந்த மதப்பற்றுக் கொண்ட அருந்தலைவர். இந்துமதத்தின் பழம்பெரும் பிரிவாகிய வீர சைவ வழிபாட்டில் ஆழ்ந்த நம்பிக்கையும் பற்றும் உடையவர் **திரு. ஜட்டி** அவர்கள்.

### வாழ்வியல் :

கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த **திரு. ஜட்டி அவர்கள்** மைசூர் அரசின் முதலமைச்சராக இருந்த மாண்பினர். வழக்கறிஞராகத் தம் வாழ்வைத் தொடங்கி அரசியலில் ஈடுபட்ட பண்பினர். பம்பாய்ச் சட்டமன்ற உறுப்பினராகிப் பணிபுரிந்த செம்மலார். மைசூர் மாநில உணவு அமைச்சராக நலம் பெருக்கிய நல்லோர். 1968 ஆம் ஆண்டு புதுவையில் ஆளுநராகப் பணி ஏற்றுத் தம் மதிநலத்தை நாட்டிற்கு அர்ப்பணித்து அரும் பணிகள் ஆற்றிய அருந்தலைவர். பின்னர் 1972 ஆம் ஆண்டு ஒரிசா ஆளுநராகப் பணிபுரியத் தொடங்கினர். தமிழகத்தில் **திரு. ஜட்டி** அவர்கள் அறநிலையங்கள் ஆகிய **ஆதீனங்களிடத்து அளவற்ற பக்தி செலுத்தினர்.** இந்த நாட்டின்

மதங்கள் அனைத்தும் வையகம் வாழப் பாடுபடும் உயர் நோக்குடையவை என்ற உண்மையைத் தெளிவாக எடுத்துரைத் தவர். தம் மேடைப் பேச்சுக்களில், "**உலகத்தை நன்னெறிப் படுத்தும் உயர் சாதனம் மதமே; மதம் வகுக்கும் சன்மார்க்கமே**" என்று அழுத்தமாகப் பேசியதுடன் அந் நெறியில் தாமும் பின்பற்றி நிற்கும் கொள்கைப் பிடிப்புடைய குரிசிலார்.

திரு. ஜட்டி அவர்கள் தருமையாதீனத்தின்பால் பேரன்பு கொண்டிருந்தார்கள். ஆதீனத்திற்குப் போந்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களைத் தரிசித்திருக்கிறார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் காசியில் பரிபூரணம் ஆகிய செய்தியையும், அவர்கள் திருமேனி தருமையாதீன மடாலயத்திற்குக் கொண்டு வரும் செய்தியையும், வானொலி வழியாகக் கேட்டபோதே உள்ளம் உருகியவர்கள். அத்துடன் தருமைக்கு உடன் நேரே வந்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களின் திருமேனிக்கு மலர் மாலை சார்த்தித் தம் வணக்கத்தைப் புலப்படுத்திய பண்பாளர். அதுமட்டுமின்றி 26ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமணியவர்களையும் தரிசித்து அளவளாவியவர். சைவாகமங்களை "வடமொழி தமிழ் ஆங்கிலம் ஆகிய மும்மொழி வடிவங்களிலும் அச்சிட்டு வெளியிட வேண்டும்" என்பதிலும் சைவ நூல்கள் வெளிவரவேண்டும் என்பதிலும், அதனால் உலகம் உய்திபெறவேண்டும் என்பதிலும் திரு. ஜட்டி அவர்கள் பேரார்வம் உடையவர்கள். **தருமையாதீனத்திற்குப் பின்னும் வருகைதந்து, 26ஆவது குருமாமணியவர்களைத் தரிசித்து அளவளாவியதுடன், கோடைக்கால சமயப் பயிற்சி வகுப்பைத் தொடங்கி வைத்துப் பேருரையாற்றிச்** சமயப் பொதுநோக்கை அடிப்படையாக வைத்து விளக்கம் செய்து, ஆதீனத் தொண்டு நலங்களை மனமாரப் பாராட்டிய மாண்புடையவர் திரு. ஜட்டி அவர்கள்.

**சில மெய்ம்மைகள் :**

இவ்விரு பெருந்தலைவர்களையும் தலைமைப்பொறுப்பில் வாய்த்திடப்பெற்ற நம் பாரத அரசு, எதிர்காலத்தில் இன்பம் பெருக்கி உலகிற்கு வழிகாட்டும் திட்டங்கள் பலவற்றைச்

செயற்படுத்திச் சிறந்து விளங்கும் என்பது உறுதி. இவர்கள் பொறுப்பேற்றுள்ள இவ்வேளையில், நடைமுறையில் சமய உலகு நினைவுகொள்ளவேண்டிய சில மெய்ம்மைகள் உண்டு.

## ஒரு பேருண்மை :

தனி மனிதனின் சமய நம்பிக்கையால் அறநெறி உறுதிப்படும் என்பதும், அந்த அறநெறியை நாட்டில் நிலைக்கவைக்கும் ஞானோபதேச மாண்பிற் சிறந்து விளங்குவன அறநிலையங்களாகிய ஆதீன மடாலயங்களும், இறைவன் திருவருள் நிலையங்களாகிய திருக்கோயில்களும் என்பதும் அனைவரும் அறிந்த உண்மைகள். அறநிலையங்கள் செயற்படவேண்டுமானால் அவற்றது நற்பணிகளில் அரசும் பொதுமக்களும் ஆர்வம்காட்டி ஒத்துழைத்தல் இன்றியமையாதது. ஆதீனங்களும், அவற்றைச்சார்ந்து அவற்றின் நிர்வாகப் பொறுப்பில் உள்ள திருக்கோயில்களும் தம் அன்றாட அலுவல் முறைகளையும், பூசை நியதிகளையும் செம்மையாக நடத்தவேண்டுமாயின் அவற்றிற்கென ஒதுக்கப்பெற்றுள்ள வருவாய்கள் அளவிற் பெருகாவிட்டாலும், அளவிற் குறைவுபடாமலும் இருத்தல்வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் வரையறுக்கப்பட்டு, இடையீடின்றி வழிவழியாகப் பணிபுரிந்து வரும் இம்மை மறுமை நலம்பெருக்கும் தெய்விகப் பணிகள் சிறக்க நிகழும்; இப்பணிகள் இடையீடு இல்லாது சிறந்து நடைபெற்றால்தான் உலகம் உய்யும். மக்கள் மலர்ச்சிபெறுவார்கள். அனைவர் மனத்திலும் நிலைத்து நிற்கவேண்டிய பேருண்மை இது.

இந்தியப் பெருநாட்டின் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அகமது அவர்களையும், துணைத் தலைவர் திரு. ஜட்டி அவர்களையும் வாழ்த்தி வரவேற்கும் இத்தருணத்தில், இந்தச் சிந்தனைகளைச் சமய உலகின் முன்வைத்து, "ஞானசம்பந்தம்" தன் பணியை அயர்வின்றித் திருவருளை முன்வைத்து மீண்டும் வாழ்த்துகிறது.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26ஆவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

ஆவணிமூலப் பெருவிழாவில்

திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்கட்கு
"பல்கலை வித்தகர்" என்னும் சிறப்புப் பட்டம் வழங்கியபோது அருளிய

# ஆசியுரை

27—8—1974.

## ஆவணி மூலத் திருநாள் :

தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசு வீற்றிருக்கும் ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமானின் ஆன்மார்த்த மூர்த்தியாக விளங்கும் சொக்கலிங்கப் பெருமான், பக்தர்கட்காக எளிவந்த கருணையைக் காட்டிய பெருநாள் ஆவணி மூலத் திருநாள். மாணிக்கவாசகருக்காக நரிகளைக் குதிரைகளாக்கித் தானே குதிரைச் சேவகனாக வந்த பெருநாள். பக்திப் பண்பாடுடையவர்களாகிய மாணிக்கவாசகர் வந்தியம்மை என்ற இருபெரும் சீரடியார்களுக்காகவே நரிகளைப் பரிகளாக்கியும் பரிகளை நரிகளாக்கியும், வைகையில் வெள்ளம் பெருகச் செய்தும், அவ்வெள்ளம் கரைபுரண்டோடும்போது அக்கரையை அடைக்கக் கூலியாளாக வந்து, பெண்சுமந்த பாகத்தனாகிய பெருமான் தன் திருமேனியில் புண்சுமந்த திருநாள்.

## பக்தி வலையில் படுபவன் பரமன் :

சொக்கநாதப் பெருமான் தன் பக்தர்களுள் ஒருவனாகிய தருமி என்னும் அந்தணனுக்குத் தமிழ்ச் செய்யுள் ஒன்றினைக் கொடுத்து பொற்கிழி பெறச் செய்தான். தம் சந்நிதியில் நின்று முக்காலங்களிலும் அன்போடும் பக்தியோடும் இசைபாடும் நியமம் பூண்ட பாணபத்திரனின் பக்தியைப் பாராட்டி, தன்பால் பக்திபூண்டு ஒழுகும் சேர மன்னனுக்குச் சீட்டுக் கவி கொடுத்துச் செல்வ வளம் நிறைவித்தான். இசைவல்ல பாண பத்திரனுக்கு இதந்

தெரிந்து இசைபாட பொற்பலகை வழங்கியருளினன். பாண பத்திரன் மனைவி இசைவாதில் வெற்றி பெறச் செய்தான். இன்னும் பல நிகழ்ச்சிகளால் தெய்வநெறிப் பற்றுடைய புலவர்களை, செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் பாராட்டி ஊக்கப்படுத்தியிருக்கிருன் என்பதைத் திருவிளையாடல் தெளிவாக அறிவிக்கின்றது

## ஆதீனப்பணி :

செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமானை ஈரெண் திறத்து உபசாரத்துடன் பூசித்துவரும் தருமையாதீனத் திருமடாலயம் தோன்றிய நானூறு ஆண்டுக் காலமாக, அவ்வக்காலச் சூழ்நிலைக் கேற்ப, புலவர்களை ஆதரித்தும் பாராட்டியும் ஊக்கப்படுத்தியும் சிறப்புச் செய்து, சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கும் பணி செய்து வருவதைத் தமிழுலகம் நன்கறியும். திருக்கூட்டத்து அடியவர்களை நல்ல புலமை உடையவர்களாக உருவாக்கியும் அவர்கள் வாயிலாக நூல்கள் பலவற்றை இயற்றச் செய்தும் சமயத்தையும் தமிழையும் வளர்த்திருக்கிறது நமது ஆதீனம். அப்பணிகளில் குமரகுருபரர், சிதம்பரநாத முனிவர், சம்பந்த சரணலயர், வெள்ளியம்பலவாணத் தம்பிரான் முதலியவர்கள் சிறப்பிடம் பெறுபவர்கள்.

## கயிலைக் குருமணியின் அறப்பணி :

முன்னோர்களைப்போலவே அண்மைக்காலத்தில் கயிலைக் குருமணிஅவர்கள் திருமடத்தையும், அறத்தையும், பல்வகையிலும், புரந்து வந்திருக்கிருர்கள் திருக்கூட்டத்து அடியவர்களும், பிறரும் சமயக் கல்வியோடு தமிழ்க் கல்வியையும், பெறுவதற்கு வாய்ப் பாகக் கல்லூரி நிறுவி அவர்களை நல்ல புலமை உடையவர்களாகத் திகழச் செய்தார்கள். புலவர்களுக்கு ஆதீனப் புலவர் பட்டம் வழங்கியும், பல துறைகளிலும், சிறந்து விளங்கும், அறிஞர் களுக்குச் சிறப்புப் பட்டம் வழங்கியும், நம் சமயத்திற்கு ஆக்கம் தேடினர்கள். பிரசாரத்திற்கென வாகனம் வைத்து, பல சிற்றூர்களிலெல்லாம் புலவர் பெருமக்களைக் கொண்டு சமயப் பிரசாரம் நிகழ்த்துவித்தார்கள். தமிழகத்தின் தலைநகராகிய சென்னையில் சமயப் பிரசாரத்திற்கென நிலையம் அமைத்து சமயப் பிரசாரம், தமிழ் வகுப்பு, சமய பாட வகுப்பு, முதலியவற்றை நடாத்தி மக்களை, சமயத்தில் — வழிபாட்டில் ஈடுபடுத்தினர்கள்.

தருமையில் உயர்பள்ளி நிறுவி, சிறுவர்கள் கல்வியறிவு பெற வாய்ப்பளித்தார்கள். தமிழகத் திருமடங்களின் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட "தமிழ்நாடு தெய்விகப் பேரவை" ஏற்படத் துணை நின்று அதன் முதல் தலைவராக இருந்து செயல் முறைகளை நெறிப்படுத்தினார்கள். இத்தகைய பல்வகைப் பணி களுள் அறிஞர்களுக்குச் சிறப்புப்பட்டம் வழங்குவதைச் செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமானுக்கு உகந்த ஆவணி மூலத் திருநாளில் மேற்கொண்டு 21 பேர்களுக்குச் சிறப்புப் பட்டம் வழங்கிப் பாராட்டி யிருக்கிறார்கள்.

## கயிலைக் குருமணி காட்டிய வழியில்:

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் மேற்கொண்ட அற வழியைப் பின்பற்றியே இரண்டு ஆண்டுகளாகப் புலவர்களுக்குப் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கின்றோம். ஒவ்வொருவரும் தனி மனிதனாயிருப்பினும், சமுதாயத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பினும், சமய அற நிறுவனங்களின் தலைமையை ஏற்றிருப்பினும், அவரவரும் செய்ய வேண்டிய கடமைகளைச் சிறப்பாகச் செய்யக் கடமைப்பட்டவர்கள். நாம் புதுவதாக அறம் செய்யாவிட்டாலும் பழமையாக இருப்பவற்றில் முன்னோர்கள் தொடங்கி வைத்த அறங்களை விடாமல் காப்பதே சிறந்த அறமாகும். அவற்றையும் செய்து, மேலும் புதுமையாகச் செய்வது சிறப்புடையது.

## அறம் என்றால் என்ன:

ஒருவருக்கு அறம் செய்ய இயலா விட்டாலும், அவர் அறம் செய்ய வேண்டும் என்ற விருப்பம் கொள்வதே அறம் செய்வதற்கு ஒப்பாகும். இதனையே ஔவைப் பிராட்டியாரும், "அறம் செய விரும்பு" என்று கூறியுள்ளார். விருப்பம், முதலில் பேச்சில் செலுத்தி செயலில் கொண்டு விடும். அறம் செய்ய விரும்பு வோர்க்குத் தொடக்கத்தில் வேம்பாக இருந்தாலும் பழக்கத்தில் அவரவர்க்கும் கரும்பாக இனிக்கும். இதனையே "ஈத்துவக்கும் இன்பம்" என்று கூறுகிறார் திருவள்ளுவர். அறம் என்ற உடனே பலரும் தயங்குகின்றார்கள். பணம் வேண்டுமே என்று மயங்கு கின்றார்கள். மனம் இருந்தால் போதும் பணம் தேவையில்லை. திருவள்ளுவர் சொல்லுகின்றார் அறம் என்றால் என்ன என்று,

"மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற."

மனம் மாசு இல்லாதிருத்தல் அறம் என்று கூறி, மேலும் ஒரு குறளில் 'அழுக்காறு, அவா, வெகுளி, இன்னச்சொல் ஆகிய இந்நான்கும் இல்லாதிருப்பதே சிறந்த அறமாகும் என்கிறார். இவற்றைப் படித்த மக்கள் அறம் செய்யப் பொருள்தான் வேண்டும் என்று எண்ணுவது பேதைமையாகும். மாசு என்பதைப் பொதுவாகச் சுட்டிக்காட்டிய திருவள்ளுவர் அதனை அடுத்து விரிவாகக் கூறிச் செல்கிறார். அதனால் ஒவ்வொருவரிடத்திலும் என்ன பொருள் இருக்கின்றதோ அதை ஈதலே போதுமான அறம் என்பது புலப்படுகிறது. அதனால்தான் ஔவைப் பிராட்டியாரும் 'ஈதல் அறம்' என்று இயம்பினர். பாரதியாரும்,

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்
அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்"

என்று கூறியுள்ளார்.

## எல்லோரும் அறம் செய்யலாம் :

உதாரணமாக எழுத்தாளன் ஒருவன் எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்குக் கடிதம் எழுதிக் கொடுத்தல், எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தல், அறம், பாவம் இவைபற்றித் தெரியாதவர்களுக்கு அவற்றை விளக்கிச் சொல்லுதல், நீதி நெறிகளை எடுத்துக் கூறுதல் ஆகியவற்றால் அறம் செய்யலாம். உடல் பலம் உள்ளவர்கள் உடல் ஊன முற்றோர்க்கும், எளியவர்களுக்கும் தம்மாலான உதவிகளைச் செய்யலாம். வழக்கறிஞர்கள் வாதிப் பிரதிவாதிகளைச் சமாதானம் செய்து வைத்தல் முதலிய அறச் செயல்களில் ஈடுபடலாம். வாழ்க்கைக்காக எந்த எந்தத் தொழிலில் யார் யார் ஈடுபட்டிருக்கின்றார்களோ அவரவரும் அந்த அந்தத் தொழில் மூலமாகவே ஏழை எளியவர்கட்கு அறம் செய்யலாம். இனியவர்கள் எளியவர்கள் முதலிய எல்லோருக்கும் செல்வந்தர்கள் தருமம் செய்யலாம். இவை எல்லாவற்றிற்கும் எடுத்துக் காட்டாகப் பெரிய புராணம் திகழ்கிறது.

## நாயன்மார்களின் அறங்கள் :

திருநீலகண்ட நாயனர் குயவராதலால் தம் தொழிலுக்கு ஏற்ப அடியவர்களுக்குத் திருவோடு செய்து கொடுக்கும் அறத்தைமேற் கொண்டார். நேச நாயனர் தாம் நெசவுத் தொழில் செய்பவராதலின் அடியவர்கட்கு ஆடைகள் கொடுக்கும் அறப்பணியைச்

செய்தார். திருக்குறிப்புத் தொண்டர் ஏகாலியராதலின் சிவனடியவர்களது ஆடைகளைத் தோய்த்து உலர்த்திக் கொடுக்கும் அறத்தால் சிறந்து விளங்கினர். சிவனடியவர்கட்கு இடையூறு செய்பவர்களோடு எதிர்த்துப் போரிட்டு, அடியவர்கட்கு வரும் இடையூறுகளை நீக்கும் அறம் செய்தார் ஆண்மைமிக்க எறிபத்தர். இவ்வாறு தாம் மேற்கொண்ட தொழிலால் எளிய முறையில் அறம் செய்த நாயன்மார்கள் பலராவர்.

## புலவர்க்குப் பாராட்டு:

அக்காலத்தில் அரசர்கள் புலவர்களைப் பரிசில்கள் ஈந்து போற்றினர்கள் என்பதைச் சங்க இலக்கியங்கள் மூலம், அறிகிறோம். படைத் தொழிலில் சிறந்தவர்களுக்கு (வீரர்களுக்கு) ஏனாதி, காவிதி முதலிய பட்டங்களைக் கொடுத்துச் சிறப்பித்தனர். இக்காலத்தில் நமது அரசு "பத்மஸ்ரீ" முதலிய சிறப்புப் பட்டங்கள் வழங்கிச் சிறப்பிக்கின்றது. அதைப்போலவே நமது ஆதீனத்திலும், செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமானுக்குகந்த பெருவிழாவில் – ஆதீனக்கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவில் புலவர்களுக்குப் பட்டம் வழங்கிப் பாராட்டி, சிறப்புப் பட்டம் பெறும் புலவர்கள் வாயிலாக அறவுரை கூறச் செய்திருக்கிறது. இன்றைய விழாவில் சிறப்புப் பட்டம் பெறுபவர், அனைத்திந்தியத் தென்மண்டல வானொலி நிலைய நிகழ்ச்சி அமைப்பாளர், சிறந்த எழுத்தாளர், இனிய பேச்சாளர், நல்ல கவிதை இயற்றும் திறம் மிக்கவர், பன்மொழி தெரிந்த பண்பாளர், இயல், இசை, நாடகம் என்ற முத்திறத்திலும் வித்தகர். நிர்வாகத் திறன் உடையவர். இவ்வாறு பல்வகைத் துறைகளிலும் சிறந்து விளங்கும் **மீ. ப. சோமசுந்தரம்** அவர்கட்குச் செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருளால் **"பல்கலை வித்தகர்"** என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பெறுகிறது. இத்தகு புலவர்களைப் பாராட்டுவதன் மூலம் சமயத்திற்கும், மொழிக்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும், ஆதீனத் திருமடம் அறப்பணி செய்து வருகிறது. சிறப்புப்பட்டம் பெற்ற மீ. ப. சோமசுந்தரம், விழாவில் பங்கு கொண்டுள்ள பக்தர்கள், கல்வி நிலைய ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் ஆகிய அனைவரும் நல்லனவற்றை அறிந்து போற்றி, தெய்வ நன்னெறிகளை மேற்கொண்டு நாட்டிற்கும், சமுதாயத்திற்கும், சமயத்திற்கும், மொழிக்கும் நற்பணி புரியுமாறு அருள்புரிய ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கலிங்கப்பெருமான் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

**சிறுகதை :**

# புதிய சோதி

டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி.,

வைகறை வேளை; கீழ்வானம் இன்னும் சரியாக வெளிச்சம் படரவில்லை. பறவைகள் தத்தம் கூடுகளினின்றும் தம்முடைய புதிய நாளைத் தொடங்குதற்கு ஆரம்பமாகக் கீசு கீசென்று ஒலித்துச் சிறகடிக்கத் தொடங்கின. இருகரைகளையும் தொட்டுக் கொண்டு, நுங்கும் நுரையுமாகக் காவேரி அழகு நடையிட்டுக் கொண்டிருந்தாள்; "நடந்தாய் வாழி காவேரி" என்று பாடி மகிழ வேண்டிய பக்குவமான பொழுது. இருபுறமும் அடர்ந்து, செழித்த மாமரங்களும், நெல்லி, இலுப்பை மரங்களும் தலை சாய்ந்து, காவிரியன்னையின் பூவிரிந்த மேனிக்கு நிழல் செய்வது போலச் செழித்து ஆற்றுக்கு மேலே கிளைகள் விட்டிருந்தன.

காலை இளங்காற்று மெல்ல வீசியபோது ஆற்றில் உதிர்ந்த சிறுமலர்கள், அந்த இனிமையான பொழுதின் சுகத்தை மேலும் இனிமையாக்கின. மெல்ல மெல்லக் கீழ்வானம் வெளுக்கலாயிற்று.

அந்தச் சிற்றூர்க்கே அழகு செய்யும் காவிரியாற்றின் அரச மரத்துத் துறையில், நீரில் சிவநாமத்தைச் சொல்லியபடியே முழுகிக் கொண்டிருந்தார் புண்ணியகோடி. அந்த இளங்காலையில் கையில் சிறு செம்புடன் நாள்தோறும் காவிரிக்கு வந்து, அந்தப் புனிதநீரில் மூழ்கி அநுட்டானங்களை முடித்துக்கொண்டு 'சிவபுராண' பாராயணத்துடன் வீதிவழியே அவர் மீளும்போது இளங்காலைப் பொழுதின் இனிய தெய்விக மணத்தை ஊரார் எல்லாரும் உணர்வார்கள். இறைவன் திருப்புகழைக்கூறும் தேவார திருவாசகப் பாடல்களை – ஓர் இனிய ஓசையமைப்பிலே – மெல்ல இதழ் பிரித்து ஓதியபடியே அவர் கையில் சிறு செம்பு நிறையக் காவிரி நீருடன் இன்றும் அவர் வீடு நோக்கி நடக்கலானார்.

தலையில் கட்டுக்குடுமி, மெய்யெல்லாம் வெண்ணீற்றுப் பூச்சு; வாயில் மலர்ந்து தவழும் திருவாசகச் சொல் மலர்கள்; கண்கள் சிறிதும் இமைக்காமல் இறைவன் அருளுருவில் தேங்கியபடி மூடியும் மூடாமலும் அப்படி ஒரு பொதுப் பார்வை.

வீட்டை யடைந்ததும் கிழக்குப் பக்கம் நோக்கி ஊர் நடுவே நிற்கும் அவ்வூர்ச் சிவன் கோயில் கோபுரத்தை மெல்ல நோக்கி, "மகாதேவா" என்று கூறியபடிக் கரங்குவித்து வழிபட்டு வீட்டிற்குள் நுழைகின்றார் புண்ணியகோடி.

சற்றைக்கெல்லாம் மணிகள் ஒலிக்க, இனிய சாம்பிராணிப் புகை கமழ, வில்வம், செம்பருத்தி, நந்தியாவர்த்தை முதலிய வற்றின் இனிய மணம் விரிந்துவர வழிபாடு செய்கின்றார் அவர்.

இன்று நேற்றல்ல; கடந்த முப்பதாண்டுகளாக இப்படி ஒரு முறையைத் தமக்குத் தாமே வகுத்துக்கொண்டு வாழ்ந்துவரும் புண்ணியகோடி ஓர் சிறந்த பக்தர்; தமிழிலுள்ள சிவபுராணங்களை யெல்லாம் நன்கு படித்து, அவற்றை இனிய கதையும், இசை யமைப்பும் கூட்டிக் 'கதாகாலட்சேபம்' செய்துவரும் இன்னிசைச் சொற்பொழிவாளர் அவர்.

புண்ணியகோடி தம் பெயருக்கேற்ப பெரும் புண்ணியவான். தொடர்ந்து இரண்டு தலைமுறைகளாக அந்த ஊரில், பாடல்பெறாத ஊராக இருந்தாலும், சிறந்த பழமை உடைய அவ்வூரில் இருந்து வருவது அவர் மரபு.

சொந்தமாக உள்ள சிறு நிலத்தைக் குத்தகைக்கு விட்டு விட்டுப் புராணப் பிரசங்கம் செய்து அறநெறி பரப்புவதையே தம் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டுவிட்டார் புண்ணியகோடி. உள்ளூர்ப் பள்ளியில் பள்ளியிறுதித் தேர்வு முடித்துவிட்டு, சென்னை சென்று மாநிலக் கல்லூரியில் தத்துவத்துறையில் எம்.ஏ. முடித்து அங்கேயே உள்ள கல்லூரி ஒன்றில் தத்துவ விரிவுரை யாளராக உள்ள அவரது மகன் அறவாழி, வருந்தி அழைத்தும் கூட அவர் தம்முரை விட்டுப் புறப்பட மனம் கொள்ளவில்லை; வருந்தி வருந்தி எழுதுகிற போதெல்லாம் 'அறவாழி! உன் தாயாரை இருபதாண்டுகளுக்கு முன் இதே மண்ணில், பூங்குடியில் பிரிந்த அன்று முதல் நான் இந்த ஊர் மண்ணோடு இரண்டறக் கலந்து விட்டேன்; எப்போதாவது ஒருமுறை இருமுறை சென்னைக்கு வரும்போதெல்லாம் என் உள்ளம் நிலை கொள்ளாமல் தவிக்கும். ஆதலால் விடுமுறைக் காலத்தில் எல்லாம் நீ பூங்கொடி யோடும், பிள்ளைக் கனியமுதாம் முல்லையோடும் இங்கு வந்துபோ; இதில் தவருதே. ஆனல் என் வாழ்வு – அறநெறிப் பாதைப் பயணம் – இப்படியே வளரமட்டும், மனம் ஒப்புக' என்று எழுதி

விடுவார்; அறவாழியும் தந்தையார் உள்ளத்தின் நிலை கண்டு, தான் படித்த தத்துவப் படிப்பின் அடிப்படையில், அமைதி கொண்டு இருந்து வருதல் இயல்பு.

எப்போதாவது தந்தையார் வந்து போகும் போதெல்லாம் அவன் மனம் தவிக்கும்; வயது சென்ற காலத்தில் தனியாகத் தவ வாழ்க்கை வாழும் அவருடைய பக்கத்தில் இருந்து உதவ முடியவில்லையே என்று உள்ளம் உருகும்; ஒரு முறை இப்படி எழுதினன் :—

" அன்புள்ள அப்பா, தங்கள் நினைவில் தத்துவப் படிப்புப் படிப்பித்து வரும் என் உள்ளம், எப்போதும் இல்லாமல் போனலும், ஒரோருகால் தங்களுக்குப் பக்கமிருந்து உதவ முடியவில்லையே என்று வருந்துகின்றது; கூடிய விரைவில் இந்த வேலைக்கு ஒரு முழுக்குப் போட்டுப் பூங்குடிக்கே வந்துவிடலாம் என்று கருதுகின்றேன்."

இந்தக் கடிதத்திற்கு உடன் எழுதிய கடிதத்தில் ' அறவாழி! உன் தத்துவப் படிப்பு மாணக்கர்களுக்கு மெய்யறிவு காட்டப் பயன்படட்டும்; அது ஒரு புனிதமான தொண்டு, அதை நீ செய்து வருவதை எனக்குச் செய்யும் பெரும் பணியாக மதித்து மகிழ்ந்து வருகின்றேன்; அந்த மகிழ்ச்சியை எனக்குக் கொடு" என்று எழுதி விட்டார் புண்ணியகோடி.

பூங்குடியோடு ஒன்ருகி விட்டது அவரது வாழ்வு. பூவும் மணமும் போல, பாட்டும் சுவையும் போல அவரைப் பூங்குடி மண் ஈர்த்து ஒன்ருக்கிக் கொண்டுவிட்டது.

* * * * *

பூசை முடிந்து புழைக்கடைப் பக்கம் வந்தபோது பண்ணையாள் பரமன் நின்றிருந்தான். அவனை அன்பு தவழப் 'பரமு' என்று கூப்பிடுவார் அவர். 'என்ன பரமு! என்ன விசேஷம்; இன்றைக்குக் காலையில் வரவில்லையே' என்ருர்.

' ஒன்றுமில்லை'ங்க ஐயா. உங்களிடம் சொல்லாமல் யாரிடம் சொல்வேன்' ங்க; என் பெண் பிரசவத்திற்கு வந்திருக்கிருள்' ன்னு சொன்னேங்' களே. அவளுக்கு இன்று காலையில் ஆண் குழந்தை; பிரசவம் ஆயிடுச்சுங்' க' என்ருன் பரமு.

'அப்படியா! நீயும் பாட்டன் ஆகி விட்டாய் என்று சொல்லு' என்றபடியே பூசைக்கு நைவேதனம் செய்து கொண்டுவந்த வாழைப்பழங்களை அவனிடம் கொடுத்துவிட்டு மலர்ந்த முகத்துடன் சிரித்தபடியே கூறினர் புண்ணியகோடி: "பரமு! இந்த வாழைப்பழத்தைப்போல உன் வாழ்க்கை மேலும் மேலும் கனியாகக் கனியட்டும்."

வணங்கிவிட்டுப் பரமன் போனபின், தம்முடைய கையால் தாமே செய்த சிற்றுண்டியை உண்டுவிட்டு முன்புறத் திண்ணைக்கு வந்து, திருத்தொண்டர் புராணத்துடன் உட்கார்ந்தார்; வழக்கம் போலப் புராணத்தில் தம்முடைய விரல்களை விட்டுப் பிரித்தார். திருஞானசம்பந்தர் புராணத்தில் திருஞானசம்பந்தர் திருவவதாரம் செய்ததைச் சேக்கிழார் கூறும் பாடல் கண்ணிற்பட்டது; அவர் மேனியில் சிலிர்ப்பு ஏற்பட்டது.

"தாவில் சராசரங்கள் எல்லாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதாரம் செய்தார்"

என்ற தெய்வமாக் கதை வரிகள் அவருடைய நெஞ்சை உருக்கி விட்டன. பரமனுக்குப் பேரன் பிறந்த நிகழ்ச்சிக்கும் இந்த நிகழ்ச்சிக்கும் ஏதோ ஓர் ஒப்புமை இருப்பதாகப்பட்டது அவர்க்கு.

* * * * *

இதன்பின் பல மாதங்கள் ஓடின; வெளியூர் சென்று சில நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு கடைசியாக, பெரியபுராண விரிவுரையாகத் தொடர்ந்து முப்பது நாட்கள் பக்கத்து நகரத்தில், நகராட்சி மன்றக் கட்டிடத்தில் முடித்துக் கொண்டு திரும்பியிருந்தார் புண்ணியகோடி. இடையில் பரமன் தன் பேரப்பிள்ளை வளர்ந்து வருவதைப் படிப்படியாகக் கூறிவந்தான். பொக்கை வாயிலே பல் முளைத்ததை விவரிப்பான் ஒருநாள்; தவழ்ந்து குடிசைக்கு வெளியேவந்து கன்றுக்குட்டியை வேடிக்கை பார்த்ததை விவரிப்பான் ஒருநாள்; தாயார் வெளியே சென்றபோது வெளியில் தானும்தவழ்ந்து ஓடியதையும், தான்வந்தபோது அழுகை நீங்கித் தன் கால்களைக் கட்டிக்கொண்டு நிமிர்ந்து பார்த்துச் சிரித்ததையும் விவரிப்பான் ஒருநாள். புண்ணியகோடியின் மனத்தில் அவரையுமறியாமல் ஒரு சிலிர்ப்பு உண்டாயிற்று. தன் பேரக் குழந்தை முல்லையின் நினைவும், அவளைத் தன்னுடன் இவ்வாறெல்லாம் இருத்திக்கொள்ள முடியவில்லையே என்ற ஏக்கமும்

உண்டாயின. 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்' என்ற பழமொழிக்கு எவ்வளவோ கூட்டங்களில் விளக்கம் கூறியிருக்கிருர் அவர். "கடந்துளோர்களும் காப்பரோ மக்கள் மேற்காதல்" என்று அவர் கம்பன் கை வண்ணத்தை மேற்கோள் காட்டும்போதே கூடியிருப்போர் நெஞ்செல்லாம் பாகாய் உருகிவிடும்.

* * * * *

அவரிடமிருந்து கடிதம் வந்ததும் அறவாழிக்கு வியப்பாக இருந்தது. கருமமே கண்ணுக இருக்கும் அன்புத் தந்தையார் முல்லேயோடும், பூங்கொடியோடும் ஒருமுறை பூங்குடிக்கு உடனடியாக வந்துபோகுமாறு எழுதியிருந்தார் அவர். அடுத்த இரண்டாவது நாளே புறப்பட்டுவிட்டான் அறவாழி.

கொஞ்சும் சலங்கை ஒலி – மாட்டுவண்டி தம்வீட்டு வாயிலில் நின்றபோது எழுந்து வந்தார் புண்ணியகோடி. கொஞ்சும் சலங்கை ஒலிக்கத் 'தாத்தா' என்று ஓடிவந்து அவரது கால்களேக் கட்டிக்கொண்டாள் குழந்தை முல்லே. எடுத்து அணைத்துக் கொண்டு குழந்தையின் கன்னத்தில் தம்முடைய முகத்தைச் சாய்த்தபடி, 'வா'ப்பா வா, பூங்கொடி' என்றழைத்தபடி உள்ளே நுழைந்தார் அவர். அடுத்த சில நாட்களில் அவ்வீட்டில் சிறுமி முல்லேயின் சலங்கைத்தண்டை இசைபாடிற்று; மழலேத் தேன் எங்கும் பாய்ந்தது. விளேயாட்டும் கும்மாளமுமாக அவள் படுத்தியபாடு வீட்டில் ஒரு புதிய சோதியை ஏற்றிவிட்டது. முல்லே, புண்ணியகோடியின் கண்களுக்கு, மீனுட்சியே குழந்தை வடிவத்திலே வந்து கொஞ்சுவது போன்றே தோன்றியது.

பக்கத்து நகரக் கல்லூரிக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு தன்னேடு தங்கியிருக்கும்படி அறிவாழியைக் கேட்டுக்கொண்டார்; அவனுல் நம்பவே முடியவில்லே. மலர்ந்த அந்தக் குடும்பத்தின் நிறைவானகலே அந்த வீட்டில் சுடர்விட்டது; முல்லே உள்ளூர்ப் பள்ளியில் 'அ, ஆ' கற்றுக்கொள்ளத் தொடங்கினுள்; பரமுவின் மகள் பேரனேடு ஊர்க்குப் போய்விட்ட செய்தியைப் பரமன் வந்து ஒருநாள் காலேயில் சொல்லியபோது அவன் கண்களில் திவலேகள் படர்ந்ததைப் புண்ணியகோடி உணர்ந்து உருகினுர். தெய்வ வழிபாடும் குழந்தையோடு உறவாடுவதைப் போன்றதுதான் என்று அவர் சொல்லிக் கொண்டார்.

# கவிதைக் கடிதம்

செந்தமிழ்ச் செல்வர்
திரு. கி. வா. ஜகந்நாதன், எம். ஏ. அவர்கள்

குருஞான சம்பந்தர் அருளூற்றை நனிபெருக்கிக்
    கூர்த்த ஞானத்
திருவளர அறம்வளரத் தமிழ்வளரக்
    கலைவளரச் சிறந்த தொண்டு
புரிசைவத் திருக்கோயி லாந்தருமை
    ஆதீனம் புவியோர் போற்ற
மருவுபர மாசார்யன் எனவளர்சண்
    முககுரவன் வளங்கள் வாழ்க !

நாள்நாளும் நீசெய்யும் நற்செயலால்
    சைவமும்நற் றமிழும் நன்கு
ஏறுற வளர்தருதல் தமிழுலகம் நனியறியும்
    இலங்கும் கோயில்
கோணுத படிபூசை யாதியன நிகழும்வகை
    குலவு மாறு
சேணுறும் புகழ்மணக்கச் செயும்நின்றன்
    கருணையினைத் தேரார் யாரே ?

செந்தமிழிற் பெரும்புலமை, அருள்நூலில் பேரறிவு,
    செம்மை சான்று
முந்துகின்ற நல்லொழுக்கம், பலரும்நயந்
    திடும்பண்பு மூண்ட தேவே,
சந்தமுறும் நினக்கென்றன் வணக்கத்தைப்
    பணிவுடனே செப்பு கின்றேன் ;
கந்தனரு ளாலென்றன் இரண்டாம்மைந்
    தன்மன்றக் கடிதம் உய்த்தேன்.

திருவிழிப்பார் வைசெலுத்தி யருள்கூர்ந்து
    பிரசாதம் திருவின் உய்த்துப்
பெருமைபெறச் செய்விப்பாய் எனநம்பு
    கின்றேன்நின் பேராட்சிக்கண்
தருமைவளர் ஆதீனம் நனியோங்கிச்
    சிறந்துபுகழ் தழைக்க வேண்டும்
மருவுநின்றன் வளமெல்லாம் மிகத்தழைப்ப
    நீடூழி வாழ்க வாழ்க !

# தமிழ்நாட்டில் சாக்தம்

நீதிபதி, கனம். எஸ். மகராஜன், பி. ஏ., பி. எல்.,

[மலர் 38, இதழ் 9, பக்கம் 440இன் தொடர்ச்சி]

இராமலிங்க அடிகளும் தம் உடலுக்குள்ளேயுள்ள ஏழு மாடங்களைத் தாண்டித் திருவாயிலை அடைகிறார். அங்கு அம்மை அவருக்கு அருள் செய்த வண்ணத்தைப் பாடுகிறார் :—

" அத்திருவாயிலில் ஆனந்தவல்லி என்
அம்மை யிருந்தாளடி — அம்மா
அம்மை யிருந்தாளடி "

" அம்மையைக் கண்டேன்
அவளருள் கொண்டேன்
அமுதமு முண்டேனடி — அம்மா
அமுதமு முண்டேனடி.
தாங்கும் அவளரு ளாலே நடராஜர்
சந்நிதி கண்டேனடி — அம்மா
சந்நிதி கண்டேனடி "

" சந்நிதி யிற்சென்று நான்பெற்ற பேறு
சாமி யறிவாரடி — அம்மா
சாமி யறிவாரடி."

யந்திரங்கள் மூலமாகவும் சக்தி வழிபாடு தமிழ்நாட்டில் நடந்து வருகிறது. திருமந்திரத்தில் திரிபுரைச் சக்கரம், ஏரொளிச் சக்கரம், வயிரவச் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனபதி சக்கரம், நவாக்கரி சக்கரம் முதலியவற்றைப் பற்றி விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதி சங்கரர் போன்ற சிறந்த ஞானிகள் தமிழ்நாட்டிலுள்ள முக்கிய ஆலயங்களில் ஸ்ரீ சக்கரத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். காஞ்சி ஸ்ரீ காமாக்ஷி அம்மை கோயிலில் உள்ள பிரசித்திபெற்ற காமகோடி பீடத்தில் ஸ்ரீ சக்கரம் ஸ்தாபிதமாகியிருக்கிறது. திருக்குற்றாலத்தில் பராசக்தி பீடத்திலும் ஸ்ரீ சக்கரம் பதிக்கப் பட்டிருக்கிறது. சிதம்பரத்தில் சிவ சக்கரமும் ஸ்ரீ சக்கரமும் சேர்ந்த

சம்மேளன சக்கரம் இருக்கிறது. அண்ட பிண்டங்களேயும் அவற்றிற்கு மூல காரணமாயிருக்கும் தத்துவத்தையும் முக்கோண, அக்ஷர பரிபாஷையில் இந்தச் சக்கரங்கள் குறிப்பிடுகின்றன.

கடைசியாக, தமிழ்நாட்டில் அரவிந்தர் சாக்தத்தை அனுஷ்டித்து வந்த முறையைப் பற்றிச் சில வார்த்தைகள்.

தெய்வத்தாய் ஒருத்திதான்; ஆனல் அவளுக்குப் பல அம்சங்கள் உண்டு. முக்கியமாக நான்கு உருவங்களில் வந்து பூலோக வாழ்க்கையை அவள் வளப்படுத்துகிருள்.

ஆதிசக்தியாயிருக்கும்போது அவள் பேரண்டத்தைக் கடந்து நிற்கிருள். அபரநிலேயிலிருக்கும் இறைத் தத்துவத்துக்கும் படைக்கப்பட்ட பேரண்டத்துக்கும் இடையே நின்று அவள் இரண்டையும் பிணைக்கும் சங்கிலியாகத் தொழில் புரிகிருள். மகாசக்தியாக இருந்து பேரண்டத்திலுள்ள பொருள்கள் உயிர்கள் யாவற்றையும் படைத்துக் காத்துக் கோடிக்கணக்கான சக்திகளே முடுக்கிவிடுகிருள். ஆதிசக்தியையும் மகாசக்தியையும் ஆன்மாக்களுக்குப் புலப்படுத்தி, மனிதத் தத்துவத்துக்கும் இறைத் தத்துவத்துக்கும் இடையில் பஞ்சாயத் காரியாக நின்று அவள் சமரஸப்படுத்துகிருள்.

எல்லாம் கடந்து நிற்கும் ஆதிசக்தியானவள், எல்லா உலகங்களுக்கும் அப்பால் நின்றுகொண்டு, இறைத் தத்துவத்தைத் தன் உணர்வில் தியானப்பொருளாகக் கொண்டு தவம் செய்கிருள். அவள் மூலம் இறைத்தத்துவமானது சச்சிதானந்தமாக வெளிப்படுகிறது. ஈஸ்வர – சக்தியாகவும் புருஷபிரகிருதியாகவுமிருந்து அவள் பிரபஞ்சலீலேயை நடத்துகிருள்; எல்லாம் அவள், அவளன்றி அணுவும் அசையாது.

ஆதிசக்தி உதவிய பொருளே உருவாக்குவது மகாசக்தியின் வேலே. இயற்கையிலிருக்கும் சக்திகளே ஒழுங்குபடுத்தியும், நியதிப்படி இயக்கியும், பிரபஞ்ச நாடகத்தில் வரும் காட்சிகளே வகுத்தும் தொகுத்தும், இதர தெய்வீக சக்திகளின் உதவியால், அவள் நாடகத்தை நடத்துகிருள். ஆனல், சூத்திரதாரரைப் போல், தன்னே மறைத்துக்கொண்டே இயங்குகிருள் மகாசக்தி. அவளுடைய குழந்தைகளாகிய நம்மிடத்திலே அவளுக்கு எல்லேயற்ற அன்பிருக்கிறது. அசுர சக்திகளினின்றும் அவள் நம்மைக் காப்பாற்றுகிருள்.

அவளுடைய நான்கு அம்சங்களுக்கும் நான்கு பெயர்கள்:—

**மகேஸ்வரி, மகாகாளி, மகாலக்ஷ்மி, மகாசரஸ்வதி,**

மகேஸ்வரி மனித மனசுக்கு அப்பாலிருக்கும் வெட்டவெளியில் அமர்ந்திருக்கிருள். மனித மனசைப் புடம்போட்டுப் பொன்னுக்கு கிருள். நம் உள்ளத்தைத் திறந்து, பராபரத்தின் ஜாஜ் வல்லியத்தைப் பார்க்கச் செய்கிருள். அவள் அமைதி நிறைந்தவள், பிரபஞ்ச ரகசியம் தெரிந்தவள், முக்காலமும் உணர்ந்தவள், கருணைக் கடல். எல்லோரும் அவளுடைய குழந்தைகள். அசுரர்களையும் அரக்கர்களையுங்கூட அவள் கருணையோடு பார்க் கிருள். அவள் கொடுக்கும் தண்டனை கூட அருளிலிருந்து பிறக்கும் தண்டனை.

இனி, மகாகாளியின் குணங்கள் மகேஸ்வரியின் குணங்களி னின்றும் வேறுபட்டவை. அவளுக்குரியது சக்திதான், ஞானம் அல்ல. எல்லையற்ற வல்லமை படைத்தவள் அவள். எந்த இடையூற்றையும் தகர்த்து நொறுக்கி, எந்த எல்லையையும் மீறி இயங்குபவள். அசுரர்களுக்கு அவள் தன் கோர உருவத்தைக் காட்டுகிருள். பொய், புலைமை, கயமை – இவற்றையெல்லாம் தயை தாக்ஷண்யமில்லாமல் உடனுக்குடனே சம்ஹாரம் செய்கிறவள். அவளுடைய வெஞ்சினமும் ஆங்காரமும் எல்லை யற்றவை.

மூன்ருவதாக இருப்பது மகாலக்ஷ்மி. இனிமையே வடி வானவள் இவள், இங்கிதம் நிறைந்தவள். இவள் பக்கத்திலிருந் தாலே நமக்கு ஆனந்தம் பொங்கும். அழகும் அன்பும் இசைவும் (harmony) இருக்கும் இடமெல்லாம் இவள் இருப்பாள். அவை இல்லாத இடத்தைவிட்டுச் சட்டென்று நீங்கிவிடுவாள். அன்பினு லும் அழகாலும் ஆன்மாக்களை இறைவனுக்கு அடிமையாக்குகிருள் இவள்.

கடைசியாக மகா சரஸ்வதி. நான்கு சக்திகளிலும் இளமை யானவள் இவள். இவளே பிரபஞ்சத்தை நிர்வாகம் செய்கிருள். மகேஸ்வரி பிரபஞ்ச சக்திகள் எப்படி இயங்க வேண்டும் என்று திட்டம் போட்டவள். மகாகாளி அந்த சக்திகளைச் செலுத்தி வேலைவாங்குகிருள். மகாலக்ஷ்மி அந்த சக்திகளைச் சுருதி சேர்த்துத் தாளம் தப்பாமல் இயங்கும்படி செய்கிருள். ஆனல், மகாசரஸ்வதியோ ஒவ்வொரு சிறு துறையிலும் இறங்கி, சக்திகள் ஒத்துழைக்கின்றனவா என்று கண்காணித்து அவற்றின் தொழிலால் எதிர்பார்க்கும் விளைவுகள் உண்டாகின்றனவா என்று பார்க்கிருள். பொறுமையோடு, களைப்புக்கொள்ளாமல், வெகு கவனமாக வேலைகள் நடந்தேறும்படி செய்கிருள்.

மனித வாழ்க்கையென்ற வீணையை மீட்டி, அதைப் பேரின்பத்தோடு சுருதி சேர்க்க விரும்புவோமேயானல், நாம் நம்மைத் தாயின் கையில் ஒப்படைத்துவிட வேண்டும். நம் இதயத்தின் ஒரு பாகத்தை மாத்திரம் அவளிடம் ஒப்படைத்து விட்டு மிச்சமுள்ள பாகத்தை நம் பொறுப்பில் வைத்துக்கொள்ள லாகாது. நிபந்தனையற்ற ஸம்பூரண சரணுகதியாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவள் நம் இதயத்திலிருந்து கொண்டு அவள் வேலையை அனுயாசமாகச் செய்ய முடியும். நாம் அவளைப் பற்றி நினைக்காமலிருக்கும் போதும் அவள் நம்முள்ளிருந்து தொழில்படத்தான் செய்கிருள். ஆனல், நாம் அவளை விரும்பித் தியானம் செய்யும்போது, அவள் மிகுந்த ஆனந்தத்தோடும் உல்லாஸத்தோடும் இயங்குகிருள். நாம் அவள் கைக் களிமண்ணுக மாறவேண்டும். எப்படி எப்படியெல்லாம் அவள் நம்மை உருட்டினலும் அப்படி அப்படியெல்லாம் நாம் வளைந்து கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். நம்முடைய உள் மனசையும் வெளி மனசையும் மிச்சம் கிச்சம் இல்லாமல் அவள் கையில் ஒப்படைப்போமாக. அப்படிச் செய்தால், ஞானமும் ஒளியும் வல்லமையும் இசைவும் அழகும் பரிபூரணமும் சித்தா காசத்திலிருந்து நம் இதயத்தினுள் இறங்கும்; நம் இதயத்தி லிருந்து பூலோக வாழ்க்கையில் அவை இறங்கும். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஜீவன் முத்திக்காக மட்டுமே பாடுபடுவது சுயநலத்தின்பாற்படும். சக்திதேவியின் அருளை நாம் பெற்று, நம் மூலமாக அதை உலகத்துக்குப் பாய்ச்சி, வானுலகத்தை மண்ணுலகத்துக்கு இழுத்துவந்து, மனிதச் சாதியை கந்தர்வ ஜாதியாக உயர்த்தவேண்டும். இதுவே அரவிந்தருடைய சாக்தம்.

இதையேதான் பாரதியாரும் சொன்னர் :

“ஆழ்க உள்ளம் சலனமில்லாது
அண்ட வெளிக்கண், அன்பினையே
சூழ்க! துயர்கள் தொலைந்திடுக!
தொலையா இன்பம் விளைந்திடுக!
வீழ்க கலியின் வலியெல்லாம்!
கிருத யுகந்தான் மேவுகவே!”

# சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர்
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

[மலர் 33, இதழ் 8, பக்கம் 391இன் தொடர்ச்சி]

இனி, மேற்கூறிய உலகாயதர் மதத்தைச் சித்தாந்த நோக்கில் நின்று முப்பத்தொரு செய்யுட்களால் மறுக்கின்றார்.

எழுசீரடிச் சந்தவிருத்தம்

உள்ள தாவது கண்ட தென்றுரை
கொண்ட தென்? உல கத்துநீ
பிள்ளை யாய்வளர் கின்ற நாள்உனைப்
பெற்ற தாயொடு தந்தையைக்
கள்ள மேபுரி கால னூர்உயி
ருண்ண இன்றொரு காளையாய்
மெள்ள வேஉளர் என்று கொண்டு
விரும்பு மாறு விளம்பிடே. 33

இதன் தெளிபொருள்

'மெய்ப்பொருளாவது, காட்சியளவைக்கு எய்துவதே,' (அதற்கு எய்தாதனவெல்லாம் பொய்) என்று வாதித்தலை நீ மேற்கொண்டது என்ன அறியாமை! நீ உலகத்தில் ஒன்றும் அறியாக் குழவியாய் வளரத்தொடங்கும் நாளிலே, உன்னைப் பெற்ற தாயையும், தந்தையையும் கரவே புரிகின்ற கூற்றுவன் கொன்றுவிட்டிருப்பின், காளையாய் வளர்ந்துள்ள இன்று ஏனையோர்க்குப்போல உனக்கும் தாய் தந்தையர் உளர் என்று கொண்டு நீ அவர்பால் அன்பு செலுத்துவாயேயன்றிச் செலுத்தாதொழியாய். உன் தாய் தந்தையர் உனது காட்சிக்கு எய்தாதொழியவும், நீ அவர்களை உள்ளவர்களாகக்கொண்டு அன்பு செலுத்துதல் எந்த அளவை (பிரமாணம்) பற்றி? அதனைச் சொல்வாயாக.

### விளக்கம்

'உரை' என்பது முதனிலைத் தொழிற் பெயர். கள்ளமாவது. உயிர்களை எவரொருவரும் அறியாதவாறே கவர்ந்து செல்லுதல். "காலனுர்" என்பது இழித்தற்கண் வந்த பன்மை. காலனை இழிக்கும் முகத்தால் எதிர்வாதியை இழித்தவாறு. 'மெல்ல' என்பது, "மெள்ள" என மருவிற்று. மென்மை – கால நீட்டிப்பு, 'மெள்ளவே கொண்டு' என இயையும். "விளம்பிடு" என்ற விதப்பு, 'காட்சியால் அன்று; அனுமானத்தினுல்தான்' என்று உடன்படுவாயாக என்பது குறித்து நின்றது. (1)

இடித்து மின்னி இருண்டு மேகம்
எழுந்த போதிது பெய்யுமென்
றடுத்த தும், அகில் சந்தம் உந்தி
அலைத்து வார்புனல் ஆறுகொண்
டெடுத்து வந்திட மால்வ ரைக்கண்
இருந்து கொண்டல் சொரிந்ததென்று
முடித்த தும்இவை காட்சி யன்றனு
மானம் என்று மொழிந்திடே 34

### இதன் தெளிபொருள்

(மேற் கூறியதேயன்றி) மேகக் கூட்டம் வானத்தில் இடித்தும், மின்னியும், கறுத்தும் எழுந்த காலத்தில், 'இக்கூட்டம் இனி மழையைப் பொழியும்' என்று உன்னை உள்ளிட்ட பலரும் பல முறை துணிந்து கூறியதும், நதிகள் சில வேளைகளில் நாம் பார்க்கின்ற மழை பெய்யாதிருக்கவும், அகில் சந்தனம் முதலிய மரங்களை முறித்து அடித்துக்கொண்டு வருகின்ற வெள்ளத்தைக் கொண்டு பெருகி வருமாஞல், அந்த நதிகட்குப் பிறப்பிடமாகிய பெரிய மலையில் மேகம் தங்கி மழையைப் பெய்தது என்று அதனைக் காணுமலே நாம் பலமுறை முடிவு செய்ததும் ஆகிய இவையெல்லாம் காட்சியால் ஆயினவாகாது அனுமானத்தால் ஆகியனவேயாம் என்று உடன்பட்டுச் சொல்வாயாக.

### விளக்கம்

மேகம், ஆகுபெயர். அடுத்தல் – பொருந்துதல்; உடன் படல். அலைத்தல் – முறித்தல். 'அலைத்து உந்தி' என மாற்றி யுரைக்க. வார்தல் – ஒழுகுதல். 'புனலை ஆறு கொண்டு எடுத்து

வந்திட' என்க. எடுத்தல் – உயரக் கொள்ளுதல். "வந்திட" என்ற செயவென் எச்சம் நிகழ்காலத்தில் வந்தது. 'அன்றி' என்பது, செய்யுளுள் 'அன்று' எனத் திரிந்தது. "மொழிந்திடு" என்றதும், மேல், "விளம்பிடு" என்றதனோடு ஒத்தது. இச் செய்யுளில் 'ஈற்றயலடி சந்தம் மயங்கிற்று. (2)

காண்ட லேஅனு மான மாவதும்
காட்சி ; முன்னதும் காட்சியேல்,
பூண்ட பூத உடம்பி னுள்ளெழு
போதம் என்கொடு கண்டனை
மாண்ட வாயில் மனங்கொள் ஞானம்
உணர்ந்த தும்அனு மானமென்
ஈண்டு பூதம் இயைந்த திவ்வுடல்
என்ப தென்பிர மாணமே. 35

## இதன் தெளிபொருள்

'முன்னர்க் கண்ட காட்சியே பின்னர் அனுமானமாயின், (அஃதாவது அடுக்களையில் புகை நெருப்போடு உடன் நிகழ்தலைக் கண்ட ஒருவன், பின் வேறோரிடத்தில் புகையை மட்டும் கண்டு அதனை ஏதுவாக வைத்து அங்கு நெருப்பு உண்டு என்று உணர்வானாயின்,) அவ்விடத்து அதுவும் காட்சியேயன்றி அனுமானம் எனப்படாது என்று நீ கொண்டு மேல் யாம் காட்டிய அனுமானங்களையும்' 'காட்சி' என்றே முரணிக் கூறுவையாயின்,

காட்சிக்கு எய்துவனவாக நீ கொண்ட பூதங்களால் ஆகிய உடம்பிற்குள்ளே அறிவு உள்ளதென்று நீ எந்த அளவையைக் கொண்டு அறிந்தாய்? (காட்சியைக் கொண்டோ அறிந்தாய்? அறிவு காட்சிப் பொருளாதல் இல்லையே. அஃதன்றியும்) அந்த அறிவு, பொறிகள் ஐந்து, மனம் ஒன்று ஆக ஆறாகி நிகழும் என்று நீ கொண்டதும் அனுமானத்தினாலே என உடன்படுவாயாக. இனி, (பூதங்கள் தம்மிற் கூடும் கூட்டமும் காட்சிக்கு எய்தாமையால்) பூதங்கள் தம்மிற் கூடும் கூட்டத்தினால் காணப்படுகின்ற இந்த உடம்பு தோன்றும் என்பதற்குப் பிரமாணம் யாது? 'அனுமானமே பிரமாணம்' என்பாயாக.

### விளக்கம்

உம்மைகள் இறந்தது தழுவிய எச்சங்கள். பூணுதல் – மேற்கொள்ளுதல். 'அனுமானம் என்று' என ஓதுதல் பாடம் அன்று. ஈண்டுதல் – நெருங்குதல்.

"காண்டலே அனுமானம் ஆவதும் காட்சி" என்னும் உலகாயதர் கொள்கை, அனுமானத்தை மறுக்க மாட்டாத தோல்வித் தானமாயினும், அதனை, "**அவ்வளவின் அவன் மகிழ்க**" என்னும் நியாயத்தால் ஒருபுடை உடம்பட்டு, வேறு அனுமானங்கள் காட்டினர். உலகாயதர் மேற்கூறியவாறு சில இடங்களில் அனுமானத்தையும் 'காட்சி' என்று சொல்லி உடன்படுதல் பற்றியே, **சிவஞான போதத்துள்** "பூதாதி ஈறும்" என்னும் வெண்பாவின் பிற்பகுதியில் கூறிய பொருள் காட்சி யளவை பற்றியே கூறியதாக **மாபாடியம் உடையார்** உரைத்தார்.

இவை மூன்று செய்யுட்களாலும் உலகாயதர் **அனுமானத்தை**, 'அளவை யாகாது' என்று இகழ்தல் பொருந்தாமை காட்டி, அவரை மறுத்தார். (3)

பழுதி லாமறை கண்ட நூல்பழு
தின்றி யுண்டது பாரின்மேல்
மொழிவர் சோதிடம் முன்னி இன்னது
முடியும் என்பது முன்னமே;
அழிவி லாதது கண்ட னம்; அவை
அன்றி யும்சில ஆகமங்களில்
எழுதி யோர்படி ஏன்று கொண்டிரு
நிதிஎ டுப்பதும் எண்ணிடே.

### இதன் தெளிபொருள்

இனி, 'குற்றம் அற்று விளங்கும் ஆகமங்கள் பிரமாணம்' என்று ஆன்றோர் கண்டறிந்த அளவையும் குற்றம் இல்லாத சிறந்த அளவையாகவே உள்ளது. அது, சோதிட நூலை ஆராய்ந்து அது வழியாக, 'பின்னே இன்னது நிகழும்' என்பதை முன்னமே சிலர் சொல்வர். அது தப்பாது நிகழ்தலைப் பலவிடத்துக் கண்டிருத்தல் பற்றி அறியப்படும். சோதிட நூல்களே யன்றி

வேறு சில நூல்களில் எழுதி வைத்துள்ள பெரியோர் கூற்றுக்களை அங்ஙனமே ஏற்றுச் சிலர் மண்ணிற் புதைக்கப்பட்டுக் கிடக்கும் மிக்க நிதிகளை (முன்னே அறிந்தவர்போலத் தெரிந்து) எடுத்துத் தருவதையும் உளங்கொண்டு ஆராய்க.

விளக்கம்

"மறை" என்றது 'ஆகமம்' என்னும் பொருட்டாயும், "ஆகமங்கள்" என்பது, 'நூல்கள்' என்னும் பொருட்டாயும் நின்றன. "மறை" என்றது ஆகம அளவையை. கண்டமைக்கு வினைமுதல் வருவித்துக் கொள்க. சோதிடம் ஆகுபெயர். முன்னர் வந்த "அது" என்பதன்பின், 'அறியப்படும்' என்பது எஞ்சி நின்றது. 'முன்னமே மொழிவர்' என முன்னே கூட்டி முடிக்க. 'அது பழுதிலாதது கண்டனம்' என்க. "அவை" என்றது சோதிட நூல்களை. "எழுதியோர்" என்றதும் அவரது கூற்றினைக் குறித்த ஆகுபெயர். படி - வகை.

இதனால், உலகாயதர் 'ஆகமங்களை அளவைகள் ஆகா' என இகழ்தல் பொருந்தாமை காட்டி, அவரை மறுத்தார். (4)

தொடரும்......

—o—


## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசிமடத்து முதல்வருமான ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 5—00

[ விலாசம் ]

கௌரவ நிர்வாக ஆசிரியர்,

உயர்திருவாளர், கே. சுப்பிரமணிய பிள்ளை

குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்.

# "மருவிய கருணைமலையே போற்றி" *

தருமையாதீனத் தமிழ்ப் புலவர்
திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L.,

## மணிவாசகர் :

மாணிக்கவாசகர், திருப்பெருந்துறையில் சிவபெருமானுல் ஆட்கொள்ளப் பெற்றவர்; அதனுல் சிவபெருமானின் கருணை வெள்ளத்தில் ஆழ்ந்து மூழ்கித் திளைத்து இன்புற்றவர். ஆதலின் "கருணைக்கண் – பெருங்கருணைப் பேராறு – மாப்பெருங்கருணையன் – கருணையின் பெருமை – மாப்பெரும் கருணையின் முழங்கி – கருணைவான்தேன் – கருணைவெள்ளப் புதுமது – மாறிலாத மாக் கருணை வெள்ளம் – எல்லையில்லை நின் கருணை – கருணையாளனே போற்றி – கருணையினுற் கலந்து ஆண்டு கொண்டாய் – கருணைக் கையில் வாங்கவும் – கருணைக்கடல் – கருணை மட்டுப் பருகிக் களித்து – கேழில் பரங்கருணை - அம்கருணை வார் கழல் – கருணைத் தேன் – வாவென்ற வான்கருணை – மயக்கறுத்த கருணைக்கடல் – தாயுற்று வந்தென்னை ஆண்டுகொண்ட தன்கருணை – கள்ளர் கருக்கிக் கருணையினுல் ஆண்டுகொண்டான் – களிவந்த வான் கருணை – பருகற்கினிய பரங்கருணைத் தடங்கடல் – கருணைக்கழல் – கருணையினுல் நிற்பான் – கருணைவெள்ளம் – கருணுலயன் – கருணையே நோக்கிக் கசிந்துளம் உருகி – கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினுல் ஆண்டு கொண்டான் – கருணை இன்றே இன்றிப் போய்த்தோ – கழிவில் கருணை – சிவன்கருணைத் தேன் பருகி – சீலமிகக் கருணையளிக்கும் திறம் – மாக்கருணைக்கடல் – காதல் பெருகக் கருணை காட்டி – கருணையினுற் பெரியோன் ஒருவன் - பரங்கருணை – பெருந்துறையின் மேய பெருங்கருணையாளன்" என்றெல்லாம், மாணிக்கவாசகப் பெருமான் சிவபெருமானின் கருணைத் திறத்தினைத் தமது திருவாசகத்தில் பல வகைகளிற் சிறப்பித்துப் புகழ்ந்து போற்றியிருத்தல் காணலாம்.

---

* சென்னைத் தியாகராயநகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் நடைபெற்றுவரும் திருவாசக வகுப்பில் நிகழ்த்திய விளக்கங்களைத் தொகுத்து எழுதியது.

**போற்றிப் புகழுரை :**

இறைவன் கருணையுடையவன்; 'கருணையினுற் பெரியோன்'. ஆதலின் அவனைக் 'குணக்குன்று' என்பது போன்று, "**கருணை மலை**" என்று மணிவாசகர் அணிபெற உருவகம் செய்கின்றார். "முகம்மது இருக்குமிடத்திற்கு மலை வராவிட்டால், மலை இருக்குமிடத்திற்கு முகம்மதுதான் செல்லுதல் வேண்டும்" என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. மலை நாம் இருக்கும் இடத்திற்கு வருதல் இயலாது; ஆதலின், நாம்தான் மலையிருக்கும் இடத்திற்குச் செல்லுதல் வேண்டும். ஆனால், கருணைமலையாகிய இறைவன் தம்மை நோக்கி எழுந்தருளி வந்து, வா வா என்று பூதலத்தே வலிந்து ஆண்டு கொண்டான். ஆதலின், இறைவனது திருவருட்டிறத்தினை வியந்து, மணிவாசகர் "**மருவிய** கருணை மலை" என்று புகழ்ந்து இறைவனைக் குறிப்பிட்டார். அங்ஙனம் தம்பால் மருவி வந்து வலிந்து ஆண்டுகொண்ட இறைவனைத் தமது அன்பும் நன்றிப்பெருக்கும் தோன்ற "மருவிய கருணை மலையே **போற்றி**" என்று வணங்கித் துதித்து வழிபட்டு மகிழ்கின்றார்.

**சிவப்பிரகாசர் :**

மாணிக்கவாசகர்க்குப் பின்னர், நம் தமிழ்நாட்டில் வாழையடி வாழையாகத் தோன்றியருளிய சான்றோர்கள் அனைவருமே, திருவாசகத்திற் பெரிதும் ஈடுபாடு கொண்டவராவர். அத்தகையவர்களாகப் பெரிதும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்களுள், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஒருவராவர். "சிவபெருமான் ஒரு பெருங் கருணைக் கடல்: கடலில் நதிகள் சென்று சேர்வது இயல்பு. சிவபெருமானுகிய கருணைக் கடலில் தலையில், கங்கைநதி சேர்ந்திருக்கின்றது. கடலில் மேகங்கள் நீரை முகக்கும். அதுபோல மாணிக்கவாசகராகிய மேகம், சிவபெருமானுகிய கருணைக் கடலில் முகந்து, அருள் என்னும் மழையைப் பொழிந்தது. அது திருவாசகம் என்னும் வெள்ளமாகப் பெருகுகிறது. அத்திருவாசகம் ஆகிய அருள் வெள்ளம், ஓதுபவர்களின் உள்ளமாகிய குளத்திற் புகுந்து, நாக்கு என்னும் மதகில் நடந்து, கேட்பவர்களின் செவியாகிய மடையிற் பாய்ந்து, உணர்வு என்னும் வயலில், அன்பாகிய விதையினின்று, சிவம் என்னும் மென்முளையைத் தோற்றுவிக்கும். பின்னர் அதனில்

இருந்து கருணையாகிய மலர் மலரவும், முத்தி என்னும் வீடு பேற்றின்பம் ஆகிய சிறந்த பயன் விளையவும் செய்யும்" என்று, துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாசகத்தின் சிறப்பினை மிகவும் சுவைபெருகப் புகழ்ந்து போற்றுகின்றார்.

## கருணைமலை :

இங்ஙனமெல்லாம் திருவாசகத்தினைச் சீராட்டிப் பாராட்டிப் போற்றி மகிழும் சிவப்பிரகாசர், அதன் ஒவ்வொரு திருப்பாடலையும், திருப்பாடற் சொற்றொடரையும், நீள நினைந்து, ஆழ்ந்து ஆராய்ந்து, தமது நுண்மாண் நுழைபுலனால், பன்மாண் பொருள்நலங்களைக் கண்டுணர்ந்து சுவைத்து மகிழ்ந்திருக்கின்றார்: அத்தகைய திருவாசகத் தொடர்கள் பலவற்றுள், "மருவிய கருணை மலையே போற்றி" என்பதும் ஒன்றாகும்.

## புலமையுளமும், பொருள் வளமும் :

"சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார், செல்வர் சிவபுரத்தின் உள்ளார்......" என்று மணிவாசகரும், "சொற் பாவும் பொருளும் தெரிந்து தூய்மை நோக்கித் தூங்காதார் மனத்திருளை வாங்காதான்" என்று திருநாவுக்கரசரும் அருளிச் செய்துள்ளனர். ஆதலாலும், இயல்பாகவே தமக்கு அமைந்த புலமையுள்ளத்தாலும், 'கருணை மலை' என்னும் தொடர்க்குப் பொருள் கொள்ளுமாறு குறித்துச் சிவப்பிரகாசர் தம் திருவுள்ளத்திற் பலவகைகளில் சிந்திக்கின்றார். இதனை அன்மொழித் தொகையாகப் பொருள் கொள்வதா? அல்லது வேற்றுமைத் தொகையாகப் பொருள் கொள்வதா? என்று பல வகைகளில் அவர்தம் திருவுள்ளம் சீர்தூக்கிக் காண்கின்றது.

## தொகைநிலைகள் :

தொடர்கள், தொகைநிலை என்றும், தொகாநிலை என்றும் இரண்டாக அமையும். பேச்சுவழக்கில் தொகாநிலைத் தொடர்களும், செய்யுள் வழக்கில் தொகைநிலைத் தொடர்களும், பெரிதும் விரவி வருதல் இயல்பு. தொகாநிலைத் தொடர்கள் எளிதிற் பொருள் புலப்படுத்துவனவாய், வெளிப்படையாக அமைந்திருக்கும். ஆனால் தொகைநிலைத் தொடர்களோ, அரிதிற் பொருள்

உணர்த்துவனவாய், புலமையாற்றலுக்கேற்பப் பொருள் கொள்ளத் தக்க குறிப்பினவாய்த் திகழும். அனைய தொகைநிலைத் தொடர்கள், வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத் தொகை, உவமத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என ஆறுவகைப்படும். ஒரு தொடரின் இடையில், ஐ–ஆல்–கு இன்–அது–கண் என்னும் ஆறு உருபுகளில், ஏதேனும் ஒன்று தொக்கு (மறைந்து) வருமாயின், அது வேற்றுமைத் தொகை ஆகும். கொல்யானை – கருங்குதிரை – மதிமுகம் – கபிலபரணர் என்றாற்போல்வன, முறையே வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை எனப்படும். இங்ஙனம் மேற்கூறிய வேற்றுமை வினை பண்பு உவமை உம்மை என்னும் ஐவகைத் தொகைநிலைத் தொடர் மொழிக்கும் புறத்தே, அவையல்லாத பிறமொழிகளாகிய உருபுகள் தொக்கு வருவன, அன்மொழித் தொகை எனப்படும். "ஐந்தொகை மொழிமேற் பிறதொகல் அன்மொழி" என்பது நூற்பா.

## அன்மொழித் தொகைப்பொருள் :

இவற்றுள் 'கருணைமலை' என்னும் தொடர், இறைவனைக் குறிக்குங்கால் '**கருணை ஆகிய மலையை யுடையவன்**' எனப் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாக வேனும், அல்லது '**மலைபோலும் கருணை வாய்ந்தவன்**' என உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாக வேனும், பொருள் கொள்ளக் கிடக்கும். முன்னையது, இறைவனுக்குரிய தசாங்கங்களுள், கருணை என்பது மலையாக விளங்குதலைக் குறிக்கும். பின்னையது, இறைவன் மலைபோன்று மிகப்பெரிய எல்லையற்ற கருணையியல்புடையவன் என்பதனை உணர்த்தும்.

## வேற்றுமைத் தொகைப்பொருள் :

சிவப்பிரகாசர்க்கு இவ்விரு பொருளும் உடன்பாடுடையனவே யாகும். "ஒரு தொடருக்குப் பலவகைகளில் வெவ்வேறு திறப் பொருள் விளக்கங்கள் காண்பதற்கும், இதற்கு இதுதான் பொருள் என வரையறுத்து நிறுவி உறுதி செய்தற்கும், இலக்கணப் புலமை மிகமிக இன்றியமையாதது. எதனையும் நிறுக்கவோ மறுக்கவோ விளக்கவோ இலக்கணப் புலமை பெரிதும்

துணைபுரியும்*. இத்தகைய இலக்கணப் புலமையில் தலைசிறந்த சிவப்பிரகாசர், திருவண்ணாமலையிற் சிலகாலம் வாழ்ந்திருந்தவர். அண்ணாமலையண்ணலின்பால் அளவில்லாத அன்பும் பக்தியும் கொண்டவர். ஆதலின், அத்திறம் விளங்க, இத்தொடருக்குப் பொருள் காண்கின்றார். திருவண்ணாமலை, பிறமலைகளைப் போன்றதன்று. ஏனையனவெல்லாம், உயிரும் அறிவுமற்ற அஃறிணை மலைகள். அங்ஙனமின்றி இங்கு இறைவனே மலைவடிவம் கொண்டு, திருவண்ணாமலையாக விளங்குகின்றான். ஆதலின் 'கருணைமலை' என்பதனை இரண்டாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு, **'கருணையை யுடையமலை'** எனப் பொருள் விரித்துரைத்துக் கொள்ளுதலும் பொருந்தும் என்று, சிவப்பிரகாசர் அழகுறத் தெளிவுறுத்துகின்றார்.

"எழுபசும் புல்லும் புனலும்எவ் விடத்தும்
இருந்திட, நினைத்தஅவ் விடத்தே
விழைவொடு வந்து தோன்றும்நீ இருப்ப,
வீணில்மா னிடர்பிறந் துழல்வார்;
மொழிதரு கருணை மலைஎனும் பெயர்அன்
மொழிஓரீஇ, வேற்றுமைத் தொகையைத்
தழுவுற நின்று, வளர்ந்திடும் சோண
சயிலனே! கயிலைநா யகனே!"

என்பது, சோணசயிலமாலையில் வரும் ஒரு தூய இனிய சிறந்த பாடல்.

முடிவுரை:

இதன்வாயிலாக, நாம் சிவப்பிரகாசர்க்குத் திருவண்ணாமலையின்மீதும், திருவாசகத்தின் பாலும் இருந்த எல்லையற்ற ஈடுபாட்டினை யுணர்வதுடன், அவர்தம் இணையற்ற நுண்மாண் இலக்கணப் புலமையையும் அறிந்துகொண்டு வியந்தினிது நயந்து மகிழ்கின்றோம். இம்மட்டோ! திருவாசகம் போன்ற சிறந்த தெய்விக அருள்நூல்களின் சொற்பொருள் நலங்களை, நாம் எங்ஙனமெல்லாம் ஊன்றியுணர்ந்து உய்தியுறுதல் வேண்டும் என்பதும், இதனாற் புலனாகின்றது.

* "Grammar, perfectly understood, enables us, not only to express our meaning fully and clearly, but so to express it as to enable us to defy the ingenuity of man to give to our words any other meaning than that which we ourselves intend them to express. This therefore, is a science of substantial utility." — *William Cobbett.*

# இருவகை வியாபாரிகள்

செந்தமிழ்ச்செல்வர் வித்துவான்
திரு. கி. வா. ஜகந்நாதன், எம், ஏ.,

'வலக்கை கொடுப்பது இடக்கைக்குத் தெரியாமல் கொடு; என்று ஏசுநாதர் சொல்லியிருக்கிறார். கொடுப்பதை விளம்பரப் படுத்த வேண்டாம். கொடையைப் பெற்றவன் திருப்தி யடைந்தால் போதுமென்பது அவர் கருத்தாக இருக்கலாம். தமிழர்கள் கொடையிலேயே சிறந்தவர்கள். செத்துப் போவதைத்தான் துன்பத்துள் துன்பமென்று மனிதர்கள் நினைக்கிறார்கள். அதைக் காட்டிலும் துன்பம் ஒன்று உண்டென்று தமிழர் நினைத்தார்கள். இன்னாததாகிய அந்தத் துன்பத்தைக் கொண்டு அளவிட்டால் செத்துப்போவது எவ்வளவோ மேலாக இனிதாகத் தோன்றும். தமிழர் வாழ்க்கைவிதியை வரையறுக்கும் திருவள்ளுவர் இதை அழகாகச் சொல்லி இருக்கிறார்.

'சாதலின் இன்னாத தில்லை! இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை.'

ஒருவர் கேட்டதைக் கொடுக்க முடியாவிட்டால் மரணத் துன்பம், இன்பமாக ஏற்றுக் கொள்வதற்கு உரியதென்று சொல்லுகிறார். ஈதல் அவ்வளவு சிறந்தது; இன்பமானது. "ஈத்துவக்கும் இன்பம்" என்று வள்ளுவர் அந்த இன்பத்தைச் சொல்கிறார். கொடுத்ததை வாங்கிக் கொள்பவனது இன்பம் இருக்கவே இருக்கிறது. அதைக் கொடுக்கும்போது ஈபவனுடைய உள்ளத்தில் இன்பம் சுரக்குமானால் அதுதான் உண்மையான ஈகை.

பழங்காலத்துத் தமிழர் ஈகையைப் பற்றிக்கொண்டிருந்த கருத்துக்கள் அவர்களுடைய உள்ளத்தின் உயர்வைக் காட்டு கின்றன.

ஆய் அண்டிரன் என்பவன் தமிழ்நாட்டில் இருந்தான். ஒரு வள்ளல். அவனது புகழ் சங்க நூல்களில் அங்கங்கே காணப்படும். அவன் 'வரையாது ஈயும்' ஈகையுடையவன். புலவர்களும் பாணர்களும் கூத்தர்களும் விறலியரும் அவனுடைய ஈகையால் பயன் பெற்றுக் கவிதை பொழிந்தும், பாட்டுப் பாடியும், ஆடல் நவின்றும் இன்புற்றனர்.

ஒரு நாள் வேற்று நாட்டிலிருந்து சில பெரியோர்கள் ஆயைக் காணவேண்டி வந்தனர். மோசியார் என்ற புலவர், ஆய் என்ற அவ்வுபகாரியோடு பெரும்பாலும் இருப்பவர். அவனைப் பற்றிப் பல பாடல்களைப் பாடியவர். அவர் பாடிய சிறப்பை எண்ணி 'மோசி பாடிய ஆய்' என்று வேறொரு புலவர் ஆயைக் குறிப்பிடுகிறார்.

வேற்று நாட்டுப் பெரியவர்கள், ஆயின் பெருமையை எல்லாம் கேள்வியுற்றவர்கள். நேரிலும் வந்து அவனுடைய பெரு வண்மையைக் கண்டு மகிழ்ந்தார்கள். பின்பு மோசியாருடன் தனியே பேசிக்கொண்டிருந்த போது அந்த வள்ளலின் வண்மையை வியந்து பாராட்டினார்கள். இந்த வள்ளல் இவ்வுலகத்தைத் தன் புகழால் நிரப்பியதோடு விண்ணுலகத்தையும் நிரப்பிவிட்டான். இவன் செய்யும் அறச் செயல்கள் இவனுக்கு மிகச் சிறந்த நற் கதியை உண்டாக்கும்" என்று சொல்லி மகிழ்ந்தார்கள்.

"அப்படியன்று" என்று இடை மறித்தார் மோசியார். "நீங்கள் சொல்வது மற்றவர்களுக்குப் பொருத்தமாக இருக்கலாம்; இந்த வள்ளலுடைய இயல்பு வேறுபட்டது. இவனுக்கு வியாபார நோக்கம் சிறிதும் இல்லை" என்றார்.

அயல் நாட்டாருக்கு விஷயம் விளங்கவில்லை. "வியாபார நோக்கம் இவனுக்கு உண்டென்று யார் சொன்னார்கள்" என்று கேட்டார்கள்.

"வியாபாரம் என்பது என்ன? ஒரு பொருளைக் கொடுத்து மற்றொன்றை வாங்கிக் கொள்வதுதானே! மனிதர்கள் இந்த உலகத்துப் பண்டங்களைக் கொடுத்து இவ்வுலகத்துப் பொருளையே வாங்கிக் கொள்கிறார்கள். சில சமயங்களில் முதலில் பண்டங்களைக் கொடுத்துக் கணக்கெழுதிக் கொள்கிறார்கள். பிறகு வாங்கிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையால்; அப்படி வாணிகம் செய்கிறார்கள். ஆய் அந்த வகையினரைச் சார்ந்தவன் அல்லன்."

அவர்களுக்கு இன்னும் விளங்கவில்லை.

"ஆம்; இம்மையிற் செய்தது, மறுமைக்கு ஆகும். பிறகு அதன் விலையைப் பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணும் தர்ம வியாபாரி, அறவிலை வாணிகன் என்று ஆயை நினைக்கக் கூடாது."

"அதிலே என்ன தவறு?"

"அவன் விஷயத்தில் அது தவறுதான். அவன் கைவண்மை வாணிகமன்று. சான்றோர் பிறரும் சென்ற நெறி என்ற மரபு பற்றி அவ்வண்மை உண்டாகியிருக்கிறது. ஈகையை அவன் கடமையென்று கொண்டிருக்கிறான். மறுமையிலே பெறும் சுகத்தை விலையாகவுடைய வியாபாரப் பண்டமென்று கருதவில்லை."

மோசியார் இதை ஒரு பாட்டாகவே சொல்லியிருக்கிறார்.

**இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்**
**அறவிலை வாணிகன் ஆய்அலன்; பிறரும்**
**சான்றோர் சென்ற நெறியென**
**ஆங்குப்பட் டன்றவன் கைவண் மையே.**

எவ்வளவு உயர்வான கருத்து! ஈகை ஈகைக்காகவே என்ற கொள்கை தமிழரின் சான்றாண்மையை எவ்வளவு சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. 'அறவிலை வாணிகன் என்ற அரிய தொடர் இந்தப் பாட்டின் உயிர் நிலையாக விளங்குகிறது.

தர்ம வியாபாரிகளை உலகத்தில் ஆயிரக் கணக்காகப் பார்க்கிறோம்; தர்மத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு வியாபாரம் நடத்தும் அவர்களைத் தமிழர்கள் விரும்ப மாட்டார்கள், பழங்காலத்தில்.

இது கிடக்கட்டும். ஈகையைப் பெற வருகிறார்களே, அவர்களிலேகூட வாணிகர்கள் இருக்கிறார்கள். வியாபார நோக்கத்தோடு தர்மம் செய்வதைத் தமிழர்கள் விரும்பாததுபோலவே, வியாபார நோக்கத்தோடு பரிசில் பெறுவதையும் விரும்புவதில்லை' தான் பிச்சையாகப் பெற்ற அரிசியை யெல்லாம் கூட்டி விற்று வியாபாரம் செய்கிறார்களே, அந்த வியாபாரிகளைச் சொல்லவில்லை, இங்கே.

அதியமான் நெடுமானஞ்சி என்ற ஒரு சிற்றரசனிடம் பெருஞ்சித்திரனாரென்ற புலவர் போனார். அதியமான் ஒரு வள்ளல், தமிழ்ச் சுவை தெரிந்தவன். புலவர் போனபோது அவன் ஏதோ தவிர்க்க முடியாத காரியத்தில் ஈடுபட்டிருந்தான். புலவரை நேரிலே கண்டு பேசுவதற்கு நேரம் இல்லை. வந்த புலவரை அசட்டை செய்யக் கூடாதென்று எண்ணி அவருக்குரிய சன்மானமாகச் சில பொருள்களை ஓர் அதிகாரி மூலம் அனுப்பிவைத்தான். புலவருக்கு முன்பு அவ்வதிகாரி அவற்றைக் கொணர்ந்து வைத்து, "ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றார்.

புலவருக்குக் கடுஞ்சினம் மூண்டது. 'பிச்சைக் காரனுக்கு பிச்சை போட்டு அனுப்புவதுபோல இவற்றை அனுப்பிப் போய்விட்டு வரும்படி சொல்லுகிறான் போலிருக்கிறது!' என்று எண்ணி உள்ளம் கொதித்தார். 'நமக்கு வேண்டியது இந்தப் பரிசில் என்று எப்படித்தான் இவன் நிச்சயம் பண்ணினானோ! பணத்துக்காக வருவதும், வந்த வரையில் லாபமென்று பெற்றுக் கொண்டு போவதும் வியாபார இயல்பு அல்லவா? நாம், என்ன வியாபார நோக்கத்தோடேயா இங்கே வந்தோம்!' என்று யோசனையில் ஆழ்ந்தார்.

"மன்னர் இவற்றை ஏற்றுக்கொள்ளச் சொன்னார்" என்று அதிகாரி ஞாபகப்படுத்தினார்.

பெருஞ்சித்திரனார் பெருமூச்சு விட்டார்; ஒரு கனைப்புக் கனைத்துக் கொண்டார்; பேசத் தொடங்கினார்:

"எவ்வளவோ குன்றுகளையும் மலைகளையும் கடந்து வந்திருக்கிறேன். அதியமானைப் பார்த்துப் பரிசில் வாங்கிக்கொண்டு போகலாமென்றுதான் வந்தேன். வந்து இங்கே நிற்கிறேன். ஆ! உங்கள் மன்னனுக்குத் தான் என்ன அன்பு! என்பால் விருப்பம் கொண்டு, 'இதைப் பெற்றுக்கொண்டு அப்படியே போய் வருக' என்று சொல்லி யனுப்பியிருக்கிறானே! என் இயல்பை அவன் எப்படி அறிந்து கொண்டானோ! சரி; அவனிடம் இதைப் போய்த் தெரிவிப்பீராக! அவன் என்னைப் பாராமல் அனுப்பி வைத்த இந்தப் பொருளைப் பெற்றுக்கொண்டு போவதற்கு நான் ஒரு வியாபாரி அல்ல. வாணிகப் பரிசிலன் அல்லேன். உபசாரம் செய்து அன்போடு பேசித் தகுதி தெரிந்து பரிசு வழங்கினால், அது தினையளவானாலும் இனிது. இதை உங்கள் மன்னன் தெரிந்து கொள்ளட்டும்"

புலவர் உள்ளத்திலிருந்து வீரம், வார்த்தைகளாகச் சொரிந்தது.

குன்றும் மலையும் பலபின் ஒழிய  
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென  
நின்ற என்னயந் தருளி 'ஈதுகொண்டு  
ஈங்கனஞ் செல்க தான்' என என்னை  
யாங்கறிந் தனனோ, தாங்கருங் காவலன்!  
காணாது ஈத்த இப்பொருட்கு யானோர்

வாணிகப் பரிசிலன் அல்லேன்; பேணித்
தினையனைத் தாயினும் இனிதவர்
துணையளவு அறிந்து நல்கினர் விடினே.

என்ற புறநானூற்றுப் பாடல் இந்தச் செய்தியைத் தெரிவிக்கிறது. 'வாணிகப் பரிசிலன்' என்ற தொடர் இதன் உயிர்நிலை. 'அறவிலை வாணிகன்' என்ற தொடரைப் போல இதுவும் தமிழரின் உள்ளத்துயர்வை எடுத்துக் காட்டுகிறது. அறம் செய்வோரும் பரிசிலரும், ஈதலையும் பரிசில் பெறுதலையும் வெறும் வியாபாரம் ஆக்கக் கூடாதென்று பழந்தமிழர் எண்ணினர். அவர்கள் கொள்கையின்படி பார்த்தால் இருவகையினரிலும் வாணிகரே இக்காலத்தில் இருக்கிறார்களென்றுதான் நமக்குத் தெரியவருகிறது.

## நன்மை செய்

ஒரு முனிவருடைய ஆஸ்ரமத்தில் வேறொரு முனிவர் உண்டுகொண்டிருந்தார். முனிவர் மகன் விருந்தினர் உணவில் விளையாட்டாகக் கல்லை எறிய விருந்துண்ட முனிவர் அறியாமல் அதனையும் அருந்தினர். முனிவர் மகன் வளர்ந்து கலை பல கற்றுத் தெளிந்து தவவேந்தராய் ஆனார். ஒருமுறை அறக்கடவுள் உலகிற்குச் சென்றபோது அங்கு ஒரு குன்று வளர்ந்துகொண்டிருந்ததைக் கண்ணுற்று இது என்ன என்று அறக்கடவுளை வினவினர். அறக்கடவுள், நீர் இளமையில் அதிதியாகவந்த முனிவருண்ட உணவில் எறிந்த கல் வளருகிறது. நீர் இங்கு வந்ததும் அதனை உண்டு தீர்க்கவேண்டுமென்றார். அதைக் கேட்ட முனிவர் மண்ணகம் வந்து அக்குன்றுக்குச் சமமான ஒரு குன்றைப் பொடி செய்து உண்டுவர தருமலோகத்தில் இருந்த குன்று கரைந்து செய்த பாவமும் அழிந்தது என்று கூறுவர். அவர் பெயர்தான் சிலாத முனிவர். நாம் செய்யும் சிறு பாவங்கள் பெரிதாய் வளர்ந்து நமக்கு இன்னா செய்யும் என்பதை உணர்த்தும் வரலாறு இது.

— திரு வாரியார்.

கேட்டு எழுதியவர்: திரு. வி. சா. குருசாமி தேசிகர்.

# நவராத்திரி விழா விளக்கம்

திரு. என். இராமகிருஷ்ண

நவராத்திரி என்பது வேனிற் காலமாகிய (வசந்த ருது) சித்திரை மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பது நாள் உமாதேவியைக் குறித்து விரதமிருந்து பூஜிக்கும் **"வசந்த நவராத்திரியையும்"**, கார் காலமாகிய (சரத்ருது) புரட்டாசி மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பது நாள் பூஜிக்கும் **"சாரதா நவராத்திரி"** யையும் குறிக்கும். இந்நாட்களில் தேவியைப்பூசிக்க வேண்டிய அவசியம் என்னவெனில், வசந்தருது சரத்ருதுவாகிய இரண்டு ருதுக்களும் யமனுடைய இரண்டு கோரைப்பற்களுக்குச் சமமாக உள்ளன. அவ்விரண்டினுள் வசந்தருதுவில் வெப்பமிகுதியால் அம்மை முதலிய நோய்களும் சரத்ருதுவில் தட்ப மிகுதியால் காலரா முதலிய நோய்களும் பெருகி மக்களைத் துன்புறுத்துவதால் அவற்றினின்றும் விடுதலை பெற உலகமாதாவாகிய உமாதேவியை விருதமிருந்து பூஜித்தல் வேண்டுமென்க. புரட்டாசிமாதத்தில் நவராத்திரியைப் பத்து நாட்கள் கொண்டாடுவதால் தசராத்திரி என்றும் தசரா என்றும் வழங்குவர். இஃது அன்றிப் பொதுவாக அம்பிகையைப் பூஜித்தற்குரிய தினங்கள் மங்களவாரம், சுக்கிரவாரம், கிருஷ்ண பக்ஷ சதுர்தசி, பிரதோஷம், முதலியனவாம்.

அமாவாசை அன்று ஒருவேளை உணவுடன் உபவாசம் இருந்து அடுத்த ஒன்பது நாட்களும் பால் பழம் முதலியன உண்டு மூன்று வேளையிலும் பூஜித்தல் வேண்டும். தேவியைக் கும்பத்திலோ (குடம்) அல்லது பிம்பத்திலோ (உருவம்) மந்தரம் பாவனை முதலிய வற்றால் விதிப்படி ஆவாகனம் செய்து இவ்விரதத்தை இயன்ற மட்டும் சிரத்தையுடன் மேற்கொள்கிறேன் என்று சங்கற்பம் செய்து கொண்டு நவராத்திரி பூஜையைத் தொடங்க வேண்டும். முதல் மூன்று நாள் தேவியை வீரம் கொடுக்கும் துர்க்கையாகவும் அடுத்த மூன்று நாள் செல்வம் வழங்கும் இலக்குமியாகவும், அதற்கு அடுத்த மூன்று நாள் கல்வி அளிக்கும் சரஸ்வதியாகவும் பூஜிக்க வேண்டும்.

கடைசி மூன்று நாளும் சரஸ்வதி தேவியாகப் பூஜிப்பதால் **சரஸ்வதி பூசை** என்று வழங்கப்படுகின்றது. இந்த ஒன்பது நாட்களிலும் விரதம் காத்துக் கொண்டாட இயலாதவர்கள் கடைசி

மூன்று நாட்களிலாவது முறையே துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி யாகப் பாவித்து ஒவ்வொரு நாள் பூஜிக்க வேண்டும். ஒன்பதாவது நாள் எல்லா ஆயுதங்களையும் கொலுவில் வைத்துப் பூஜிப்பதால் **ஆயுத பூஜை** என்று வழங்கப்பெறும். தேவி அண்டங்களை எல்லாம் படைப்பவள் என்பதை உணர்த்தவே பொம்மை களாலான **"கொலு"** வைத்துக் கொண்டாடப்படுகின்றது. பஞ்சபாண்டவர்கள் வனவாசத்திற்குச் செல்லும் போது தமது ஆயுதங்களை ஒரு வன்னிமரப் பொந்தில் வைத்து விட்டுப் போனதாகவும், பின்னர் திரும்பி வந்து அவற்றை அவர்களுள் விஜயன் என்னும் அர்ஜுனன் பூஜித்து எடுத்துக்கொண்டதாகவும் பத்தாம் நாள் பேசப்படுவதால், அந்த நாளை **விஜயதசமி** என்று கொண்டாடுகின்றனர்.

தினம் தோறும் காலையில் நீராடி நித்தியகடன்களை முடித்துக் கொண்டு தேவியைப் பூஜிப்பதுடன் ஒவ்வொரு நாளிலும் கன்னிப் பெண்களை (2 வயது முதல் 10 வயதுள்ளவர்களை) தேவியின் அம்ச மாகப் பாவித்து பூஜித்து உணவு உடை அணிகலம் முதலியவற்றை இயன்றவரை கொடுத்து வர வேண்டுமென்று தேவிபாகவதம் முதலிய நூல்கள் கூறும். பத்தாவது நாளன்று விரதத்தைப் பூர்த்தி செய்து உணவு கொள்ள வேண்டும். இவ்விழாவினை ஆண்கள், பெண்கள் இருபாலரும் மேற்கொள்ள வேண்டும். ஸ்ரீ ராமபிரான் இந்நவராத்திரி விழா விரதமிருந்து நல மடைந்துள்ளார். இம்மையிலே நல்லன எல்லாம் கைகூடும். மறுமையில் இந்திராதி போகங்கள் கிடைக்கும். முடிவில் பேரின்பவீடும் கிட்டும். முறையாக இவ்விரதத்தை அனுஷ்டிக்க இயலாதவர்கள் லலிதா சகஸ்ரநாமம், சவுந்தர்யலகரி, சகலகலா வல்லி மாலை, அபிராமி அந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைதமிழ் முதலியவற்றைப் பாராயணம் செய்தும் செய்யக் கேட்டும் பயன் பெறலாம்.

மாயூரத்தை அடுத்த தருமபுரத்தில் நவராத்திரி விழா சிறப் பாகக் கொண்டாடப்படும். நாட்டில் எங்கும் இல்லாத பதினெட்டு கைகள் கொண்ட **அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி** இங்குக் கோயில் கொண்டுள்ளாள். நவராத்திரியின்போது இங்கு சதசண்டி யாகம், குமாரி, சுவாசினீ, வடு பூஜையும் மற்றும் பல ஹோமங்களும், கோடி அர்ச்சனையும் விதிப்படி நடக்கும். தற்போது அம்பாள் 10 கோடி அர்ச்சனைகள் செய்யப்பெற்று சிறப்பாக விளங்குகின்றாள். தருமையில் **வனதுர்க்கா தேவி** கோவிலும் உள்ளது. இங்கு வசந்த நவராத்திரி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

தருமையாதீனம் ஆவணிமூல விழாவில்
'பல்கலை வித்தகர்' என்னும் சிறப்புப் பட்டம்
வழங்கப்பெற்ற

## திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்கள்

ஆற்றிய

# உரைச் சுருக்கம்

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருவடிகட்கு வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தப் பட்டத்தை எனக்குத் தகுதி நோக்கிக் கொடுத்ததாகக் குறிப்பிட்டு அருளாசி வழங்கினார்கள் குருமணி அவர்கள். ஆனல் அந்தத் தகுதி இப்போது எனக்கு இல்லையாயினும், அவர்கள் ஆசியின் வன்மையால் ஒரு காலத்தில் எனக்குக் கிட்டும் என்று நம்புகின்றேன்.

மாணக்கர்கள் குருபக்தியைக் கொள்ள வேண்டும். கல்வி குருபாதத்தைப் பற்றிக்கொண்டால் தானே வரும்.

"மந்திரமாவதும் மாமருந்தாவதும்
தந்திரமாவதும் தானங்களாவதும்
சுந்தரமாவதும் தூநெறியாவதும்
எந்தைபிரான்றன் இணையடிதானே"

என்று திருமூலர் திருவாய் மலர்ந்துள்ளமை நினைவில் இருக்கத் தக்கது.

நம் குருநாதரவர்கள் என்பால் கொண்ட எல்லையற்ற அன்பும், எல்லையற்ற கருணையுமே இப்பட்டத்திற்குரியவனக என்னை ஆக்கின என்பேன். "மாராயம் பெற்ற நெடுமொழி" "மாராய வஞ்சி" என்ற தொல்காப்பியத்திற்கேற்ப என்னுடைய இவ்வுரை அமைவதாகும்.

1938-ஆம் ஆண்டில் சாமிநாதையர் பொற்பதக்கம் முதல், சாகித்ய அகாடமி பரிசு வரை நான் பெற்றுள்ள எல்லாச் சிறப்புக்களும் என் முன்னோர் செய்த புண்ணியமே ஆகும்.

என்னுடைய ஆசிரியர் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் திருவாளர் சிதம்பர ராமலிங்கம் பிள்ளை, ரசிகமணி திரு டி. கே. சி., இராஜாஜி ஆகியோர் வாழ்த்துக்களால்தான் இச்சிறப்பு எனக்கு வாய்த்தது. எனக்குச் சோமசுந்தரம் என்றும் என் தமக்கைக்கு மீனாட்சி என்றும் பெயர் அமைத்த எந்தையார் புண்ணியமே சொக்கநாதர் கருணைக்கு இன்று ஆளாக்கியது.

மாணக்கர்கள் கடவுள்பக்தி உடையவர்களாக விளங்குதல் வேண்டும். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில், நுழைவாயிலில் ஊசி கோபுரம் ஒன்று உள்ளது. "This land belongs to Lord Christ" என்று அங்கே எழுதியிருப்பதை நான் கண்டேன். அந்த அளவிற்கு விஞ்ஞானத்தில் முன்னேறியிருக்கும் அவர்கள் தெய்வபக்தியில் ஊறியிருக்கிறார்கள். சர். சி. வி. இராமன், ஐன்ஸ்டீன் முதலிய விஞ்ஞான மேதைகள் மெய்ஞ்ஞானச் சிந்தனையுடன் பரம்பொருள் உண்டு என்ற முறையையே வெளியிட்டிருப்பது மாணக்கர் உணரத்தக்கது.

ராகத்திற்கு 'நியாசம்' இருப்பதுபோல தருமபுரத்திற்கு 'நியாசம்' குருபாதம்தான். அதுவே ஜீவன். அதுவே உய்தி காட்டுவது.

மாணக்கர்கள் இவ்வாறு திருவருளால் வெற்றிகள் பெறுக என வாழ்த்தி முடிக்கின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருவடிகளுக்கு என் பணிவார்ந்த வணக்கங்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# செய்திகள்

## தருமையாதீனத்தில் ஆவணிமூலத் திருநாள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் மதுரைச் சொக்கநாதப் பெருமானுக்கு உகந்த திருநாளாகிய ஆவணி மூலத் திருநாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு 21—8—74 புதன் கிழமை முதல் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்தன. 27—8—74 செவ்வாய்க்கிழமை ஆவணி மூலத் திருநாள். பெருமான் பிட்டுக்குகந்து மண் சுமந்து புண் சுமந்த திருநாள். அன்று ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூஜை மடம் மலர்களால் பந்தலிட்டு ஒப்பனை செய்யப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி வழிபாடு ஆற்றினார்கள். அன்பர்கள் பலர்வந்து வழிபட்டு பிரசாதம் பெற்று மகிழ்ந்தார்கள். சிறந்த நாதஸ்வர இன்னிசை, தேவார பாராயணம் முதலியனவும் நிகழ்ந்தன. ஔவையார் அருளிய "விநாயகர் அகவல்" என்ற நூல் தெளிவுரையுடன் விழா மலராக வெளியிடப்பெற்று, அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது. வழிபாட்டுக்குப் பின்னர் திருச்சி, திருமுறைக் கலைஞர், திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார், பெருமான் ஆவணிமூலத்தில், மணிவாசகருக்காகவும், வந்தியம்மைக்காகவும் நிகழ்த்திய திருவிளையாடல்களை விரிவுரையாக நிகழ்த்தினார்கள். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர். நண்பகல் மாகேசுவர பூஜை சிறப்புற நிகழ்ந்தது.

27—8—74 செவ்வாய்க்கிழமை மாலை 7 மணி அளவில் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூஜைமடத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழிபாடாற்றி, சென்னை அகில இந்திய தென் மண்டல வானொலி நிலைய நிகழ்ச்சி அமைப்பாளர் திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்களுக்குப் 'பல்கலை வித்தகர்' என்னும் சிறப்புப் பட்டம் வழங்கி, பொன்னாடை போர்த்தி ஆசி அருளினார்கள். ஒவ்வொரு துறையிலும் சிறந்த புலவர் பெருமக்களைப் பாராட்டிச் சிறப்புப்பட்டம் வழங்கும் பணியைத் தருமை ஆதீனம் பல்லாண்டுக் காலமாக ஆவணிமூலத் திருநாளில் செய்து வருவதைத் தமிழுலகம் நன்கு அறியும்.

# தருமையாதீனக் கல்வி நிலையங்களின்
# ஆண்டு விழா

தருமையாதீனத்தில் நிகழ்ந்த ஆவணிமூலத் திருநாளையொட்டி, திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழா மூன்று நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இந்நாட்கள் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்த் திருநாட்களாக நிகழ்ந்தன. 25—8—74 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் ஸ்ரீ குருஞான சம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளிகளின் ஆண்டு விழா நடந்தது. அன்று தருமையாதீனத் தமிழ்ப் புலவர், சிரோமணி, வித்துவான் திரு. வி. சபேசன் அவர்கள் 'செந்தமிழ் இயல்வளம்' என்ற தலைப்பிலும், வித்துவான் திருமதி. ப. நீலா அவர்கள் 'மனவியல் நோக்கில் இயல்' என்ற தலைப்பிலும் சொற்பொழிவு ஆற்றினர்கள். ஸ்ரீ குருஞான சம்பந்தர் தொடக்கப்பள்ளி மாணவ–மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

26—8—74 திங்கட்கிழமை மாலை 4 மணி அளவில் ஆதீனத் தேவாரப் பாடசாலை, வேத சிவாகம பாடசாலைகளின் ஆண்டு விழா இசைத்தமிழ்த் திருநாளாக நடைப்பெற்றது. அன்று தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருநெறிச் செம்மல், நல்லிசைப் புலவர், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் 'மொழியியல் நோக்கில் இசை' என்ற தலைப்பிலும், புலவர் திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள் 'இன்றமிழ் இசைவளம்' என்ற தலைப்பிலும் சொற்பொழிவு ஆற்றினர்கள். ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்நிலைப் பள்ளி மாணவ - மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

27—8—74 செவ்வாய்க்கிழமை மாலை 7½ மணி அளவில் பட்டமளிப்புப் பாராட்டு விழாவும், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, சைவ சித்தாந்தக் கல்லூரிகளின் ஆண்டுவிழாவும் நடைபெற்றன. இன்றைய திருநாள் நாடகத் திருநாளாகக் கொண்டாடப்பட்டது.

வேலூர், ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். கல்வி நிலையங்களின் ஆண்டு அறிக்கைகள் வாசிக்கப்பட்டன. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஆதீனக் கல்வி நிலைய மாணவ – மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கி, பட்டமளிப்பு விழா ஆசி வழங்கியருளினார்கள்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியில் பயின்று சென்னைப் பல்கலைக்கழக வித்வான் தேர்வில் முதல்வகுப்பில் தேர்ச்சிபெற்ற மாணவருக்கு ஆண்டுதோறும் பரிசு வழங்கி வருவதுபோல், இவ் யாண்டு இரா. கிருஷ்ணகுமாரி என்ற மாணவிக்குப் பொற் பதக்கமும், பிறவகுப்பு மாணவர்களுக்கு நூல் பரிசுகளும், சைவ சித்தாந்தக் கல்லூரிப் பரிசாக ஒவ்வொரு வகுப்பு மாணவருக்கும் மும்மூன்று பரிசுவீதம் நான்கு வகுப்பு மாணவருக்கும் ரொக்கப் பரிசுகளும் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களது அருட்கொடையாக வழங்கப்பட்டன. தருமை யாதீனப் பல்கலைக் கல்லூரி வெள்ளிவிழா நினைவுப் பரிசாக ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் வழங்கிய ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பெற்றன. சிதம்பரம் அறப்பணிச் செல்வர் டாக்டர் திரு. கே. அரங்கசாமி பிள்ளை அவர்கள் ஆதீனப் பணிகளையும், 'பல்கலை வித்தகர்' என்னும் பட்டம்பெற்ற திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்களையும் பாராட்டிச் சிறப்புரை ஆற்றினார்கள். தருமையாதீனத் தமிழ்ப்புலவர், 'செஞ்சொற் கொண்டல்' டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச். டி. அவர்கள் பட்டமேற்ற திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்கள் தமிழ்மொழிக்குச் செய்துள்ள பணிகளை விளக்கிப் பாராட்டிப் பேசினார்கள். திருச்சிராப்பள்ளி திருமுறைக் கலைஞர் வித்துவான் திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள் 'நாடகத்தமிழ்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார்கள். 'பல்கலை வித்தகர்' என்ற பட்டம் பெற்ற திரு. மீ. ப. சோம சுந்தரம் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்திற்குத் தமது வணக்கத்தைப் புலப்படுத்தி நன்றி நவின்றார்கள். ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்களால் 'மனமாற்றம்' என்ற சமூக நாடகம் சிறப்பாக நடிக்கப்பெற்றது.

# எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்
ஆசிரியர்,
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி,
திருப்பனந்தாள்.

(ஸ்ரீ ஆனந்த ஞு புரட்டாசி மீ 1உ முதல் 31உ முடிய)
(17—9—74 முதல் 17—10—74 முடிய)

ஸ்ரீ ஆனந்தஞு புரட்டாசிமீ 1உ மங்களவாரத்தில் சூரிய உதயம் முதல் 6 நாழிகை 6 விநாடிக்கு ஸ்ரீ சூரிய பகவான் உலக க்ஷேமத்தின் பொருட்டு துலா லக்கினத்தில் கன்னி சங்கிரமணமாக புரட்டாசி மாதபிரவேசம் செய்து சகல கலைக்ஞான பதியாய் திகழ்கின்றார். அதன் பலன் உலகமெங்கும் சகல கலைகளும் புத்துயிர் பெறும். விஞ்ஞான உலகில் புதுமை உண்டாகும். அதனால் பிரஜைகள் பகுத்தறிவு மிகுந்தவர்கள் ஆவார்கள். ஓவியம், சிற்பம், பரதநாட்டியம், இசை முதலிய கலைகள் மிளிரும். நாடு பூராவும் வேதபாராயணங்கள், சமய போதனைகள் முதலிய நற்பணிகள் நடைபெறும். நறுமண வஸ்துக்கள் வெளுமைப் பொருளாகிய வஸ்திரம் முதலான நாகரிகப்பொருள்களை மக்கள் பெரிதும் விரும்புவார்கள். விஞ்ஞான அறிஞர்கள் அணுசக்தி ஆய்வு பலவாகச் செய்து காண்பர். நூதன பொருள் படைப்போர் புதிய மாதிரிப் பொருள்களைப் படைப்பார்கள். ஆயினும் 12ஆம் இடத்தில் கிரகங்கள் இருப்பதால் பொருள்களின் விலை அதிகமாக உயரும்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனைத் தரும். 2க்குரிய சுக்கிரன் சுபத்துவம் பெற்று உள்ளதால் குடும்ப அபிவிருத்தி நாளுக்கு நாள் அபிவிருத்தியும், போஜனாதி

சௌக்கியங்களும், வாக்கு சாதுரியமாக எதையும் சாதித்துக் கொள்வதும், பணவகை முயற்சிகள் நினைத்தபடி அனுகூலப் படுவதும் ஆகும். சகோதரர்களின் குடும்பம் சிறந்து விளங்கும். அவர்களுக்குப் புத்திரோற்பத்தி முதலிய சந்தோஷ சௌக்கி யங்கள் ஏற்படும். இந்த ராசிக்குப் பந்துமித்திரர்கள் வந்து கூடு தலும் மனமகிழ்ச்சியும் ஏற்படும். இம்மாதம் 12ஆம் தேதிக்கு மேல் சுக்கிரன் 6ஆம் இடத்தில் சூரியனுடன் கூடுவதால் உடல் இளைப்பு அல்லது தோல் சுருக்கம் ஏற்படச் செய்யும். இதற்கு நித்திய விரதானுஷ்டானங்கள், ஜெபம், நிஷ்டை, தெய்வவழிபாடு முதலிய முறையைக் கடைபிடிப்பதால் அவ்விதக் குறைவு இல்லாமல் இலக்ஷ்மிகரமான தேஜஸ் ஏற்படும். புதன் நிலைமையால் ஒப்பந்த பத்திரங்களில் நல்ல அனுகூலங்களைப் பெற ஏதுவாகும். சத்துருக்கள் யாதும் செய்ய இயலாமல் தியக்கமடைவர். கிரியை ஸ்தானாதிபதி குரு வீட்சணம் பெற்றதால் உத்தியோகம் அல்லது தொழில் சிறப்பாக நடந்து வரும்.

## 2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ – உரோகணி – மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

ரிஷப ராசி 9 பாதங்களும் கோள்களின் சஞ்சாரத்தைக் கவனித்துப் பார்த்ததில் சுபமான பலனையே கொடுப்பதாக இருக் கின்றன. 2க்குரிய புதன் இம்மாதம் விஸ்தீர்ண கிரணம் பெறு வதால் தன வசதிகள் சரளமாக இருப்பதுடன் நல்ல பிரயத்தனங் களும் தெய்வானுக்கிரகமும் ஏற்படும். வாக்கு உறுதியுடனும் யாவரும் ஏற்கும் வகையில் பொருந்துவதாகவும் இருக்கும். வீடு வாகனத்தில் நிலைமை மாறுமல் இருந்து வரும். மனைவி புத்திரர்கள் சௌக்கியத்துடன் இருந்து வருவார்கள். உறவினர்கள் அல்லது புத்திர பௌத்திரர்களால் ஓர் செலவை ஏற்க நேரும். சத்துருக்கள் மறைமுகமாகப் பேசுபவர்களாக இருப்பார்கள். ஆனல் பாதகம் வராது. உத்தியோகம் அல்லது தொழிலில் கடமைப்பணி நன்கு நடைபெறும்.

## 3. மிதுனம் :- மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை – புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுன ராசி 9 பாதங்களும் இம்மாதம் கிரகங்களின் சஞ்சாரத்தைக் கவனித்துப் பார்த்ததில் மிச்சிரமான பலனைத் தருவதாக இருக்கின்றன. தன வரவும் வஸ்திர பூஷண சேர்க்கையும் நல்ல விதமாக இருந்து வரும். சகோதரி அல்லது புத்திரிக்கு வாத வாய்வு அல்லது மயக்கம் வந்து உடன்

குணமாகும். இந்த ராசிக்கு நெஞ்சில் வலி அல்லது ரத்தாதிகத்தால் சிரமம் ஏற்படினும் தக்க வைத்தியத்தால் குணமாகும். புத்திக்குரிய புதன் இம்மாதம் விஸ்தீர்ணகிரணம் பெற்றுத் திகழ்வதால் நல்ல பிரயத்தனங்களும் எழுத்து மூலமான சில நன்மைகளும் ஏற்படும். அஷ்டம ராசிக்குரிய சனி உடவில் இருந்தாலும் நீசாஸ்டமம் அடைந்ததால் எந்த சிரமமான காரியத்தையும் சாதகமாக சாதிக்கும் வல்லமையை உண்டாக்கும். தர்ம கர்மாதிபதிகளின் நிலையில் தெய்வீகமாகவும், புண்ணியமாகவும் உள்ள காரியங்களில் ஈடுபடச் செய்யும். உத்தியோகத்தில் நல்ல அந்தஸ்தையும் காரியங்களை முறையுடன் செய்து நிறைவேற்றும் சாதுரியத்தையும் கொடுக்கும்.

**4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ - பூசம் – ஆயில்யம்**

கடக ராசி 9 பாதங்களும் கிரகங்களைப் பரிசோதித்துப் பார்த்ததில் மிச்சிரமான பலனைத் தருவதாக இருக்கின்றன. தன வசதி சரளமாக இருக்கும். சிவப்பு, பச்சை, பவழம் முதலான மணிகள் பதித்த ஆபரண பிராப்தி ஏற்படும். பந்து மித்திரர்கள் வருகையும் மனமகிழ்ச்சியும் ஏற்படும். வாகனுதிபதி சுக்கிரன் சனி வீக்ஷணம் பெற்றதால் வாகனத்தில் பழுது அல்லது மாறுதல் ஏற்படும். இம்மாதம் 12 ஆம் தேதிக்குமேல் 3-ல் சூரியனுடன் சுக்கிரன் சேர்வதால் சிறு நீரகக் கோளாறு வந்து உடன் குணமாகும். சுகபாக்கியங்களும், புராணகாவியம், கதா காலட்சேபம் கேட்கும் சந்தர்ப்பங்களும் ஏற்படும். வயது முதிர்ந்தவர்களாயின் தத்துவ ஞான மார்க்கத்தில் மனம் செல்லும். பத்துக்குரிய செவ்வாயின் நிலையால் விவசாய வேலைகள் திருப்தி கரமாக நடக்கும். செந்நெல் பாக்கியம் குறைவின்றி விருத்தி ஆகும். உத்தியோகம் அல்லது தொழிலில் பிரசித்தம் ஏற்படும்.

**5 சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் $\frac{1}{4}$**

சிம்ம ராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். 2-க்குரிய புதன் விஸ்தீர்ண கிரணத்துடன் பிரகாசிப்பதால் தன வசதி திருப்திகரமாக இருந்துவரும். பொருள்கள் கொடுத்தல் வாங்குதல்களில் நல்ல செலாவணி உண்டாகும். 3-க்குரிய சுக்கிரன் மத்திம பலனைத் திகழ்வதால் சகோதர வகையில் சில அல்லல்கள் வந்து நீங்குவதாகும். வீடு வாகனங்களில் சாதாரண

நிலைமையாக இருந்து வரும். மனைவி ஸ்தானதிபதி நற்பல ஸ்தானத்தில் இருப்பினும் அம்சகத்தில் நீசாஸ்தமனம் பெற்றதால் மனைவியின் உடல் நலம் சற்றுக் குறைவுபட்டுக் காணும். புத்திரர் புத்திரிகளின் சௌக்கியம் நன்றாக இருக்கும். 9-க்கும் 10 க்கும் உரியவர்களின் நிலையால் இம்மாதம் 12ஆம் தேதிக்கு மேல் தொழில்துறையில் நல்ல உற்சாகத்தையும் ஆதாயத்தையும் உண்டுபண்ணும். பணியாட்கள் தொழிலாளர்களை ஊக்குவித்தல் மூலம் காரியம் நன்முறையில் செயல்படும்.

**6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$**

கன்னியா ராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனை நடக்கும். 2-க்குரிய சுக்கிரன் இம்மாதம் 12உ வரையில் நற்பல ஸ்தானத்தில் இருந்தும் வேதை ஸ்தானத்தில் கிரகம் இருப்பதால் குடும்ப கஷ்டமும், பண நெருக்கடியும் இருந்து வரும். தெசாபுத்தி சாதகமாக இருப்பவர்களுக்கு இவ்வித குடும்ப கஷ்டமோ பண நெருக்கடியோ இராது. தன் பேச்சுக்கு மதிப்பு கொடுப்பவர் போல் சிலர் காட்சியளிப்பர். ஆனல் உள்ளபடி அவ்விதம் இருக்க மாட்டார்கள். இம்மாதம் 12 ஆம் தேதிக்கு மேல் இவைபோன்ற பாதகங்கள் நீங்கச் செய்யும். 3-க்குரிய செவ்வாய் நிலையால் எக்காரியத்தையும் தைரியமுடன் செயல்படச் செய்யும். சதுர்த்த பஞ்சமாதிபதிகளின் நிலையால் வீடு சம்பந்தமாகவும் களத்திர புத்திரர் சம்பந்தமாகவும் அலைச்சல் கொடுக்கும். ஆயினும் தெய்வானுகூலத்தால் எதிர்பாராத விதத்தில் சில நன்மைகளை ஏற்படுத்தும். தர்ம கர்மாதிபதிகளின் சஞ்சாரத்தால் இம்மாதம் 12 ஆம் தேதிக்கு மேல் உத்தியோகத்தில் மேல் அதிகாரிகளின் அனுகூல சௌகரியங்களை ஏற்படுத்தும் விவகாரத்தில் ஜெயானு கூலம் ஏற்படும்.

**7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$**

துலா ராசி 9 பாதங்களும் இம்மாதம் நற்பலனைக் கொடுக்கும். 2, 7-க்குரிய சுக்ரு 12 ல் இருப்பதால் ஸ்திரி சம்பந்தமாக ஓர் செலவு நேரும். குரு திரிகோண ஸ்தானத்திலிருந்து பாக்கிய லாப ஸ்தானங்களை பார்ப்பதால் செலவு ஆதாரமானதும், சுககர மானதுமாகும். ஆண்டுக் கோள்களாகிய குரு, சனி சஞ்சாரத்தால் வீட்டு வசதி, புத்திரர்களின் நலம் சிறப்பானதாக விளங்கும். எதிலும் தைரிய மனப்போக்கும், அமைதி நிலையையும் உண்டு பண்ணும். 9-க்குரிய புதன் விஸ்தீர்ணகிரணம் பெற்றுத் திகழ்வதால் சமயோசித யோசனையாலும் காலதேச வர்த்தமானத் தாலும் நல்ல பொருள் ஆக்கம் ஏற்படும். தொழில் அல்லது வர்த்தகத்தில் முதலீடு செய்ய நேரும். லாபம் விரயம் சமமாகும்.

8. **விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை**

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத் தரும். தன வசதி திருப்திகரமாய் இருந்து வரும். 3, 4க்குரிய சனி சுபர் வீட்சணத்துடன் இருப்பதால் சகோதரர் சௌக்கியம், மாதா சௌக்கியம் நன்ருக இருக்கும். இம்மாதம் 12ஆம் தேதிக்கு மேல் ஸ்திரீ சௌக்கியம், ஸ்திரீ வாரிசு மூலமாக ஆதாயம், கல்யாண பேச்சு வார்த்தைகள், முடிவு செய்தல் முதலிய நற்பலன்களை உண்டாக்கும். தொழில் துறையில் அல்லது உத்தியோகத்தில் நற்கியாதி உண்டாகும். கௌரவம் தன்மதிப்பு மேலானதாக இருக்கும். காரியத்தில் குழப்பமாகவும் பாரமாகவும் இருந்தவை நீங்கி சுலபமாகும். புதன் விஸ்தீர்ணகிரணத்துடன் பிரகாசிப்பதால் கல்வியில் அல்லது செய்தொழிலில் முன்னேற்ற மார்க்கம் ஏற்படும். ஆயினும் அதிக முயற்சியால் ஆகும்.

9. **தனுசு :- மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$**

தனுர்ராசி 9 பாதங்களும் மத்திம பலனைத்தரும். தனாதிபதி சனி இம்மாதம் நீசாம்சம் பெறுவதால் தனவசதி நெருக்கடியாக இருந்துவரும். இளைய மூத்த சகோதரர் குடும்பங்கள் பிரபல்யமோ க்ஷீணமோ இன்றி சாதாரண நிலைமையில் இருக்கும். இம்மாதம் 12ஆம் தேதி வரையில் பெற்றோருக்கு வாத வாய்வால் தொல்லை அல்லது மயக்கம் வந்து நீங்குவதாகும். அம்மான் குடும்பத்தில் தக்க வசதிகள் இருந்தும் அளவு கடந்த செலவு விஷயத்தாலும் மற்றவர் தகாத வார்த்தைகளைக் கூறுவதாலும் நிம்மதியில்லாமல் இருக்கும். இந்த ராசிக்கு புத்திரர்களின் உடல் நலக் குறைவால் ஓர் செலவு ஏற்படும். ஒவ்வோர் சமயம் மனைவி வகையினரால் அல்லது பந்துக்களின் அனுதாப சகாயங்களால் மன நிம்மதி அடையும். உடலில் வாத நீர் சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வழக்கு விவகாரத்தில் மத்திம பலனாக இருக்கும் தொழில் அல்லது உத்தியோகத்தில் சீரான நிலைமையாக இருந்துவரும்.

10. **மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$**

மகர ராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். 2-க்குரிய சனி நற்பல ஸ்தானத்தில் இருந்தாலும் நீசாம்சம் பெற்றதால் தன வசதி சீராக இருக்கும். 3-க்குரிய குரு நல்ல நிலையிலும் 3ஆம் இடம் அசுபர் பார்வை பெற்று இருப்பதால் சகோதரர் குடும்பம் சிறப்புடையதாயினும் ஓர் சச்சரவும் மனத் தாங்கலும் ஏற்படச்செய்யும். குடும்பத்தில் புத்திர பௌத்திரர் களால் ஏற்படும் மகிழ்ச்சி சிரமங்களை சாதாரணமானதாகவும் இலக்ஷிய போக்காகவும் ஆக்கும். இம்மாதம் 12ஆம் தேதிக்குமேல்

ஸ்திரி சௌக்கியமும் பிரக்யாதையும் சுபகாரிய பிரச்னைகளும் ஏற்படும். உத்தியோகம் அல்லது தொழிலில் அதிக மதிப்பை உண்டுபண்ணும். சமூகத்தினர் பிரபலஸ்தர்களால் சீர் தூக்குதலும் அனுசரணைகளும் ஏற்படும்.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் – பூரட்டாதி $\frac{3}{4}$

கும்ப ராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனை இருக்கும். பண வசதி சீராக இருக்கும். குடும்பத்தில் செலவினங்கள் ஒரு புறமும் பற்றுக்குறை ஒரு புறமும் இருப்பினும் சமாளிக்கும் சக்தியை உண்டாக்கும். எந்த இக்கட்டான நிலைமையிலும் தைரியமுடன் செயல்படும் வல்லமையைக் கொடுக்கும். பெற்றோரால் செல்வும் தன் கடமையைச் செய்யும் பாக்கியமும் ஏற்படும். வாகன சுகக்குறைவும் அதில் நஷ்டம் ஒருபுறமும் இருந்தாலும் சம ஆதாயங்கள் வந்துசேரும். விவசாயத் துறையில் அற்பமான பலனையே தரும். ஓர் விபத்து, இடறிவிழுதல், காயப்படுதல் ஆகிய சம்பவங்கள் நிகழலாம். ஆயினும் பாதிக்காது. கணவன் மனைவி ஒற்றுமையும் குடும்பக் காரியங்களில் சிறப்பும் ஏற்படும். உத்தியோகம் அல்லது தொழிலில் நன்மதிப்பை ஏற்படுத்தும். எந்த சிரம நேரமாயினும் தன் மதிப்பும் கௌரவமும் மேலானதாகவே இருக்கும்.

12. மீனம் :- பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி - ரேவதி

மீன ராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனை இருக்கும். குடும்பத்தில் வருமானம் விருத்திகரமும் திருப்திகரமுமாக இருக்கும். புத்திரர், புத்திரிகளின் மூலமான சந்தோஷ பிராப்தியும் ஸ்திரபுத்தியும் உண்டாகும். புதன் விஸ்தீர்ண கிரணத்துடன் பிரகாசிப்பதால் ஸ்திரி சௌக்கியமும், நூதன வாகன பிராப்தியும், வீடு அலங்காரமும் இலக்ஷ்மி கடாட்சமும் ஏற்படும். கணவன் மனைவிக்குள் சச்சரவு ஏற்படினும் உடனுக்குடன் சமாதானம் ஆகும் வீட்டில் சுப காரியங்களாலும், ஓர் ஸ்தல யாத்திரை தெய்வ பிரார்த்தனை முதலிய காரணங்களாலும் சுபச்செலவை ஏற்படுத்தும். ரோகாதிபதியின் நிலையால் மூலநோய் போன்ற உஷ்ண வியாதி வந்து நீங்கும். உத்தியோகம் அல்லது ஜீவனத்தில் பிரயத்தனமும் சாத்தியவனுகூலங்களும் ஏற்படும்.

★